பக்கங்கள்:-பதினெட்டு

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி 07 | வெள்ளிக்கிழமை | (24.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 309

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



## தீபாவளித் திருநாளில் சமாதான ஒளி பிறக்கட்டும்



(யாழ்ப்பாணம்)

இருபது வருட கால யுத்தம் தணிந்து சமாதானச் சூழ்நிலையில் கொண்டாடப்படும் இன்றைய தீபாவளித் திருநாளில் நாட்டில் நிரந்தர சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகளும், சர்வதேச இந்து மத குருபீடாதிபதி ஜ.மகேஸ்வரக் குருக்களும் தனித்தனியாக விடுத்த தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

இந்து மதத் தலைவர்கள் விடுத்த தீபாவளிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள (18ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சனைப் பதவி நீக்குக !

## நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

**இலஙகையின் பாதுகாப்பிற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெலிவ்சனின் நடவடிக்கைகள் திருப்த'கரமாக இல்லாதிருப்பதால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

கடந்த 16-ம் திகதி இரவு விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் எனச் சந்தேகிக்கப்படும் கப்பலலொன்றைக் கடற்படையினர் சுற்றிவளைக்க முற்பட்ட சமயம் அது தொடர்பான தகவல்களை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதால் அக்கப்பல் தப்பிச் சென்றதாகக்கடற்படைத் தளபதி குற்றஞ்சாட்டியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலை, தப்பவைப்பதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு புலிகளுக்கு தகவல் அனுப்பியதாகக் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து ஆயுதக் கப்பல் (18ம் பக்கம் பார்க்க)

## திருமலை கிண்ணியாவில் களேபரம்

## புலிகள் சென்ற ஆட்டோவை மறித்து முஸ்லிம்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

### முஸ்லிம்எம்.பிக்களின்வீடுகள் அடித்து நொருக்கப்பட்டது

(மூதூர்)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற ஹர்த்தால் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் முஸ்லிம் வன்முறையாளர்களினால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகளும், அலுவலகங்களும் அடித்து நொருக்கப்பட்டன.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான இரண்டு மாட்டு வண்டிகள் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியும், தடுத்து வைக்கப்பட்டுள்ள வண்டில்களை விடுவிக்கக் கோரியுமே நேற்றுக் ஹர்த்தால் இடம் பெற்றது.

ஹர்த்தால் காரணமாக பாடசாலைகள் எதுவும் அங்கு (18ம் பக்கம் பார்க்க)

## தேசிய தீபாவளி விழா இன்று நல்லூர் ஆலய முன்றலில்

### குன்னக்குடி வைத்தியநாதன் வருகை



(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடாத்தும் தேசிய தீபாவளி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று நல்லூர் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் முற்பகல் 10 மணியளவில் வட பிரதேச அஞ்சல்மா அதிபரினால் தீபாவளி ஞாபகார்த்த முத்திரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

(18ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சன் நேற்று யாழ்.விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிவ்சன் நேற்று உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

யாழ்.வந்த இவர் குடாநாட்டின் நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

மாவட்ட கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவர் ஹரீனா, உப தலைவர் கிறிஸ்கொப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வருகின்ற நிலைமைகளை எவ்வாறு கையாள வேண்டுமென்பது குறித்து இதன் போது ஆலோசனை வழங்கப்பட்டது.(இ-4)


## போரை புலிகள் விரும்பவில்லை இந்திய உளவுத்துறை ஊர்ஜிதம்

### அமைச்சரவையில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டுமோர் யுத்தத்திற்குள் இறங்க மாட்டார்கள் என்பதில் இந்தியா பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த 19-ம் திகதி இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு விட்டு நாடு திரும்பிய ரணில் விக்கிரம சிங்கா நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு (18ம் பக்கம் பார்க்க)



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

வாசகர்கள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்.

## முனைச் சம்பவத்தைக் கண்டித்து கடையடைப்பு; மறியல் போராட்டம்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று முன்தினம் படையினரால் பொது மக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை சனிக்கிழமை பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கடையடைப்பு மற்றும் கண்டனப் பேரணி ஆகியன இடம்பெறவுள்ளன.

முனைப் பகுதிப் பொது மக்களின் ஏற்பாட்டில் இடம் பெறும் இக் கடையடைப்பு மற்றும் கண்டனப் பேரணிக்கு வடமராட்சிக் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதேவேளை அன்றைய தினம் முனைப் பகுதியில் இருந்து ஊர்வலமாகப் புறப்படும் மக்கள், பருத்தித்துறைப் பிரதேசம் முன்பாக காலை 9 மணிமுதல் மறியல் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-43)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீபத்திருநாள் சிறப்பிதழ்

## ஸ்ரீ ஐயப்பதாஸ சிவாச்சாரியரின் தீபாவளி ஆசிச்செய்தி

உலகெங்கும் வாழுகின்ற இந்து மக்களால் கொண்டாடப்படும் தீபத்திருநாள் தீபாவளியாகும். மூவுலகிலுள்ளோரையும் துன்பத்துக்குள்ளாக்கிய "நரகாசுரனை" பாமாதேவி சம்ஹாரம் செய்து மூவுலகத்தவரையும் இன்பக்கடலில் ஆனந்தமாக வாழ வைத்த நாள் தீபாவளியாகும்.

இப்புனித நாளில் வீடுகள் தோறும் சுத்தம் செய்து, எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி, ஆலய வழிபாடு செய்து பின் உற்றார், உறவினருடன் விருந்துண்டு ஆனந்தமாக தீபத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இறைஅருள் கிடைக்கவும், ஒவ்வொருவர் உள்ளத்திலும் மறைந்திருக்கும் தீய இருள் அகன்று ஞான ஒளி பெற்று போரானந்தப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறை அருள் துணை கொண்டு எமது பரிபூரண அருளாசிகளை வழங்குவதில் மன நிறைவு கொள்கிறேன்.

**ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியர்.**

## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரின் தீபாவளிச் சிறப்புச் செய்தி

இந்துக்கள் பண்டுதொட்டு கொண்டாடிவருகின்ற பண்டிகைகளில் 'தீபாவளித் திருநாள்' ஒரு தனியிடத்தை வகிக்கின்றது. தீபாவளித்திருநாள் மக்களின் வாழ்வில் ஒளியை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தது. அதன் சிறப்புக்கள் பற்றி புராணங்களும் இதிகாசங்களும் பல்வேறாக எடுத்துப் பேசுகின்றன. தீமைகளின் ஒட்டு மொத்த வடிவமான நரகாசுரன் என்ற அசுரனை வதம் செய்து தேவர்களையும் மற்றையோரையும் காத்ததாக புராண வரலாறு கூறுகின்றது. இக் கொண்டாட்டங்களை மக்கள் தம்மைச்சூழ்ந்துள்ள தீமைகள் அகன்று விடிவு உண்டாகுமென்று மகிழ்ச்சியுடன் தமது உற்றார், உறவினர், நண்பர்கள், சமூகமென்று மிகப்பரந்த ரீதியில் கொண்டாடுவார்கள்.

இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகையை தேசிய விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு யான் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரதம அமைச்சர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கினார். அரசின் பூரண அனுசரணையோடு தீபாவளியை தேசிய விழாவாக எனது அமைச்சுக் கொண்டாடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் செய்துள்ளது. 23ம் திகதி கொழும்பிலும், 24ம் திகதி யாழ்ப்பாணத்திலும் அவ்விழா சிறப்பாக நடைபெறும். இவ்விழாக்களில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றுவதற்காக தமிழ்நாடு பேரூர் ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு மருதாசலம் அடிகள் வருகை தரவிருப்பது சைவமக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். தேசியத் தீபாவளி விழாவில் உலக வயலின் இசை மேதை டாக்டர் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களும் குழுவினரும் வயலின் இசைமாரி பொழிவதற்கு வருகின்றார்கள். இரண்டு தசாப்தமாக நடைபெற்ற சிவில் யுத்தத்தினால் நலிவுற்ற உள்ளங்களுக்கு இசை மேதை குன்னக்குடியின் வயலின் இசை தீபாவளித் திருநாளில் ஆறுதலைத் தருமென்பது எனது நம்பிக்கை. தீபாவளிக்காக அஞ்சல் திணைக்களம் வெளியிடும் சிறப்புத் தபால் முத்திரையும், முதல்நாள் உறையும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெளியிட ஏற்பாடகியுள்ளது. எனது அமைச்சின் முதல் செய்திவெளியீடான 'சிவன் ஒளி' என்னும் செய்திமடல் அமைச்சு இதுவரை மேற்கொண்ட பணிகளை உள்ளடக்கி வெளிவருகின்றது.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எனது அமைச்சு வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வலுவிழந்தோர் நிலையங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றில் வசிக்கும் அனைவருக்கும் புத்தாடைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவ்வாறு யாழ். மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இரண்டாயிரம் பேருக்கு புத்தாடைகள் வழங்கப்படும். ஆலயம் தோறும் சிறப்புப் பூசைகளும் அன்னதானமும், வஸ்திரதானமும் வழங்குவதற்கு எனது அமைச்சின் வேண்டுகோளையேற்று வட-கிழக்கு, மலையகம் உட்பட நாடு முழுவதுமுள்ள நூற்றுக்கணக்கான ஆலயங்களின் அறங்காவலர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இதுவரை காலமும் பூசை வழிபாடுகளுடன் மாத்திரம் இருந்த ஆலயங்கள் யான் அமைச்சுப் பொறுப்பையேற்றபின் சமூகப் பணிகளிலும் தம்மை இணைத்துக் கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். இது எமது சமயத்திற்கு ஒரு நல்ல பரிமாணத்தை ஏற்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை. தொடர்ந்தும் ஆலயங்கள் தம்மை நலிவுற்றோர் வளர்ச்சியிலும் சமுதாயப் பணிகளிலும் ஈடுபடுத்துவதன் மூலம் கட்டாய மதமாற்றத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென இத்திருநாளில் அனைத்து இந்து மக்களையும் கேட்டுக் கொள்கின்றேன். அனைத்து மக்களுக்கும் அவர்கள் வாழ்வில் இருளகன்று ஒளி பிறந்திட எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமசிவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**தி.மகேஸ்வரன், பா.உ.**
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.

## தீபாவளி தீபம் சமாதான சுடராய் ஒளிரட்டும்

முன் ஒரு முறையும் இல்லாதவாறு சமாதான சூழலில் தீபாவளி இவ்வருடம் வருவது தமிழ் மக்களுக்கான நிம்மதியாகும். மேலும் வீட்டில் தீபங்களை ஏற்றி வாழ்வு சிறப்படைய வேண்டும் என எண்ணும் தமிழ் மக்களுக்கு உறுதியான நிம்மதியான சமாதான வாழ்வுக்கு இவ் வருட தீபாவளி தீபம் சமாதான சுடராய் பிரகாசிக்க வேண்டும் என ஸ்ரீவித்யா சர்வதேச இந்து மத பீடம் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. நரகாசுரன் மக்களுக்கு கொடுமைகள் புரிந்த போதிலும் இறக்கும் தறுவாயில் இறைவனிடம் தான் செய்த தவறுகளுக்காக அன்றைய தினம் மகிழ்வாக இருக்க வேண்டும் என வரம் வேண்டினான். இதே நிலையில் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் இல்லாத அடிப்படை உரிமையுடன் தமது கலாசாரத்தையும் பேணிப்பாதுகாத்து வாழ்வதற்கான வாழ்வு அமைய வேண்டும் என இத்தீபத் திருநாளில் அனைவரும் பிரார்த்திப்போமாக. புலம் பெயர்ந்தவர்கள், முகவரி இழந்தவர்கள், அகதிகளாக்கப்பட்டோர், அநாதைகள் இவ்வாறான முத்திரைகள் நங்கி தங்கள் சொந்தங்களுடன் சொந்த வீட்டில் கொண்டாடும் நிலைமை ஏற்பட வேண்டும் என தேசிய பண்டிகையாகக் கொண்டாடும் இவ்வருட தீபாவளி அத்திபாரம் இடும் என சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளை பிரார்த்தித்து ஆசிகளையும் வாழ்த்துக்களையும் ஸ்ரீவித்யா பீடம் தெரிவித்துக்கொள்கின்றது.

**ஆர். பாபுசர்மா**
செயலாளர்

**ஸ்ரீவித்யாபீடம்**

## யாழ். ஆயரின் தீபாவளி பெருவிழாச் செய்தி

எமது இந்து சமய சகோதரர்கள் தீபத் திருநாளைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் அவர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்த தீபாவளி தினம் அவர்களுக்கு அன்பு வழி மகிழ்வையும் உறவு வழி பகிர்வையும் நிறையத்தரும் தினமாக இருக்க ஆசிக்கிறோம்.

இன மத நிற மொழிகளை கடந்து அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான ஒரு பொருளாக அனைத்து மனிதர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக ஒளி விளங்குகிறது. ஒளியின் விழாவினை எல்லா சமயத்தவர்களும் தமது சமய சம்பிரதாயங்களுக்கும் முறைகளுக்கும் ஏற்ற வகையில் கொண்டாடுகிறார்கள்.

இந்து சமய சகோதரர்கள் தமது சமய பாரம்பரியத்திற்கேற்ப ஆண்டின் இறுதிப் பகுதியில் தீபத் திருநாளைக் கொண்டாடுவதும் அதே காலப் பகுதியில் கத்தோலிக்க மக்கள் தம் சமய பாரம்பரியத்தின்படி ஒளியின் விழாவினை கொண்டாடுவதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

கத்தோலிக்க மக்களும் இந்து சமய மக்களும் அருகருகே பின்னிப்பிணைந்து நீண்டகாலமாக அன்புறவில் வாழ்ந்துவரும் எமது மண்ணிலே இதுபோன்ற விழாக்கள் உறவை வளர்க்கவும் புரிந்துணர்வை அதிகரிக்கவும் பெரிதும் துணைபுரிகின்றன.

இந்த வகையில் பாப்பரசரின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் சபை தலைவர் பேராயர் மைக்கல் ஆண்டகை 2003ஆம் ஆண்டு தீபாவளி பெருவிழாச் செய்தியை அனுப்பியுள்ளார். அதில் இந்து சமய சகோதரர்களும் கத்தோலிக்க சமயத்தவர்களும் மனித மாண்பை கட்டியெழுப்புவதில் முன்னிற்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுக்கிறார்.

அவர் தமது செய்தியில், எல்லா மனிதர்களினதும் உயர் நிலையான கடவுள் நம்பிக்கையை புதுப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் மற்ற மனிதர்களுடனான உறவுகளை புதுமெருகூட்டவும் சமய விழாக்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. அத்தோடு கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரினது மாண்பை மீளக் கண்டுபிடிக்கவும் மதிப்புடன் மீள உறுதிப்படுத்தவும் துணிவுடன் பாதுகாக்கவும் அழைப்பு விடுக்கின்றார்.

ஒவ்வொரு மனிதரது மாண்பும் எல்லோரையும் படைத்த கடவுளிடமிருந்தே பெறப்படுகிறது. இறை நம்பிக்கையுடைய ஒவ்வொருவரது வாழ்விலும் இந்த மனித மாண்பை வளர்த்து பேணிப் பாதுகாக்கும் பணி முக்கியமானது. எப்படி ஒளி இருளை மேற்கொள்கிறது? எப்படி நன்மை தீமையை வெற்றிகொள்கிறது? எப்படி மன்னிப்பின் மூலமாக வெறுப்பு அன்புக்கு இடமளிக்கிறது? போன்ற சிந்தனைகள் மூலமாக இ[illegible] சமய பாரம்பரியத்தில் தீபாவளிப் பெருவிழாவானது சிந்தனைக்கு நல்விருந்தளிக்கின்றது என்று தெரிவிக்கிறார்.

எமது மண்ணின் கடந்த கால போர் அனர்த்தங்களால் மனித மாண்பு சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த மனித மாண்பை தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமையோடு கட்டியெழுப்ப எம்மிடையே உறவுகளை வளர்த்துக்கொள்ள தீபாவளி போன்ற விழாக்கள் பெரிதும் துணைபுரிய வேண்டுமென விரும்புகின்றோம், வாழ்த்துகின்றோம்.

**ஆயர் இல்லம்**
**யாழ்ப்பாணம்.**

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ் ஆயர்.**

## தீபாவளி நல்லாசிகளும், வாழ்த்துக்களும்

எமது திருநாட்டிலே யுத்தம் என்ற இருளகன்று சமாதானத் தீபவொளி எங்கும் இன்று சுடர் விட்டுப்பிரகாசிக்கின்றது. இவ்வினிய தினத்திலே இந்து மக்கள் அனைவரும் நீராடிப் புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவனை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து இல்லங்கள் தோறும் தீபங்கள் ஏற்றி வசதி வாய்ப்புக்கள் குறைந்த மக்களுக்கு உணவு, உடை என்பன அளித்து இன்புற்று மகிழ்வோமாக.

இச்சமாதான ஒளியானது எங்கணும் வியாபித்து என்றும் நிலைத்து நல்லொளி பரப்பி அனைத்து மக்களும் சிறப்புற்று வாழ இறைவனை மனதார வேண்டி இந்துமத குருமார்கள் சார்பில் தீபாவளி வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறிக் கொள்கின்றோம்.

''சர்வே ஜனாஹா சுகினோ பவந்து''

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,**
**தலைமைச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## புனர்வாழ்வளிப்பு,அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

உலகம் எங்கும் பரந்து வாழ்கின்ற கோடிக்கணக்கான இந்துக்கள் தீபாவளி பண்டிகையினை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் தீபாவளி தினம் வழமையான கொண்டாட்டங்களிலும் பார்க்க ஒருவித்தியாசமான சூழ்நிலையில் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இரு தசாப்தங்களாக நிலவிய யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும் ஏனைய பல்வேறு இடையூறுகளுக்கும் மத்தியிலும் கொண்டாடப்பட்ட தீபாவளி பண்டிகை இன்று சமாதானம் தோற்றுவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அமைவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நாட்டில் தற்போதுள்ள சமாதான சூழ்நிலை மேலும் தொடரவேண்டும். அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை வெற்றிபெற்று நாட்டில் சகல இனமக்களும் உரிமையோடும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ இன்றைய நன்நாளில் பிரார்த்திப்போமாக.

**பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன**

## தீபாவளி நாளின் மகிழ்ச்சி நீடிக்கட்டும்!

தமிழர்கள் கொண்டாடும் திருநாட்களில் தீபாவளியும் குறிப்பிடத்தக்க ஒன்று. தேவர் குலத்துக்கு தீமைகளை இழைத்து வந்த நரகாசுரனை வதம் செய்து தீமைகளை அழித்தொழித்த வெற்றித் திருநாளாகவே தமிழர்கள் தீபாவளியைக் கருதுவது வழக்கம். பழைய ஆடைகளைக் கழித்து புத்தாடைகள் அணிந்து பூரித்து நிற்கும் இத் திருநாளின் மகிழ்ச்சி எல்லாத் தரப்பினருக்கும் நீடிக்க வேண்டும் என்பதே எமது பேரவா ஆகும்.

காலங்காலமாக வரலாறும் சமய தத்துவங்களும் போதிக்கும் படிப்பினைகள் எமக்கு புறம்பானவையாகிவிட முடியாது. அதர்மம் அழிந்ததைக் குறிக்கும் தீபாவளித் திருநாளின் மகிழ்ச்சி எந்நாளும் நீடிக்க வேண்டி எமது மகிழ்ச்சியை உங்கள் உள்ளங்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா.பா.உ.**

**செயலாளர் நாயகம்**
**ஈ.பி.டி.பி.**

# தீபத்திருநாள் சிறப்பிதழ்


எல்லோருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அபிராமி எலக்ரிக்கல்ஸ்

CFC CLIPSAL சிக்கன ரியூப் பல்புகள் விநியோகிப்பதற்கு இலங்கை மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்

ABIRAMY ELECTRICALS

DEALERS IN ELECTRICAL GOODS

கிளிப்சால் மின்சாரப் பொருட்களின் யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்

ABIRAMY ELECTRICALS

62/34, STANLEY ROAD JAFFNA.

(NEAR THE JAFFNA POST OFFICE) T.P: 021 222 2489

[C/6690]

துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட அனைவர்க்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

உங்கள் மேசைத் தொலைபேசி இணைப்புக்களை தெளிவான முறையில் உரையாடக்கூடிய வகையில் 24 மணி நேரத்திற்குள் பெற்றுத் தருபவர்கள் ரெலிவோய்ஸ் ட்ரேடிங் கம்பனி நிறுவனத்தினர்

இன்றே விரையுங்கள்



ரெலி வோய்ஸ் ட்ரேடிங் கம்பனி

இல.13 பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.

T.P. :0712 335580 0777 067389

[C/6687]

எங்கும் மங்களம் பொங்க அனைவர்க்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ராம்கோ சீமெந்து

RAMCO CEMENT

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS - 107 அங்கிகாரம் பெற்றதும்
ISO - 9002 தரம் பெற்றதும்
BSS - 12-1991 தரத்திற்கு அமைவாக

தயாரிக்கப்பட்ட ஆசியாவின் முதல் தர (நம்பர் -1) சிமெந்து ராம்கோ.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி

91ஸ்ரான்லி வீதி, T.P: 021 222 2350 யாழ்ப்பாணம்.

[C/6689]

அனைவருக்கும் எம் இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

- நவயுகம் மகிழும் புது மலர்ப் பூங்கா
- புதுமணத் தென்றலில் பூத்து நிற்கும் நவநாகரிக நகை உலகம்



ஸ்ரீ மீனாட்சி தங்க மாளிகை

187 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone : 021 222 6109

[C/6697]

அனைவருக்கும் தமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்

நியூ பிரசாந்தி ஜுவல்லறி ஸ்தாபனத்தினர்

கண்ணைக் கவரும் அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள



நியூ பிரசாந்தி ஜுவல்லறி

95 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C/6696]



# தீபத்திருநாள் சிறப்பிதழ்




அனைவருக்கும் எம் உளங்கனிந்த
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஸ்தாபனம்



வீ. எம். கே.



ஜுவலர்ஸ்
305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[C/6669]

எம்மினிய அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும்
தித்திக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்
ரூபா பன்முக வர்த்தகம்
சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்
நியாய விலையில் மொத்தமாக யாழ் நகரில்
பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்
ரூபா பன்முக வர்த்தகம்
[C/6688]
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் யாவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
பவர் செலுலர் — இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி விசேட கழிவில் விற்பனைக்கு — பவர் செலுலர்
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
வாகன சேவை 0712387122
I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.
உத்தரவாதம் உண்டு
HAND PHONE UNLOCK செய்து தரப்படும்
HAND PHONE பழுது பார்க்கப்படும்.
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல்
எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என
அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம்
இயங்குகின்றது. மேலதிக விபரங்களுக்கு-
பவர் செலுலர் T.P 021 2227070, 0712 399220, 0712 384624, 0777 242416
மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் அருகில்)

எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

விஜேய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 0712 399113
இந்திரா கொமினிக்கேசன், நயினாதீவு, அனலைதீவு. 0712 370471, 070 213207, 0777 111448
பிரசன்னா கணனி நிலையம், K.K.S. றோட், சுன்னாகம். 0712 507828
திருப்பதி கொமினிக்கேசன் மானிப்பாய். 07021 3352, 0777 722914, 021 222 5940, 021 222 5732
சன் கொமினிக்கேசன், திக்கரை, காரைநகர். 0712 299 264, 070 213190
தீபா கொமினிக்கேசன் பிள்ளையார் கோவில் வீதி, நெடியங்காடு, வல்வெட்டித்துறை.
பவர் கொமினிக்கேசன் நெடுந்தீவு. 0712 348922, 0712 370491
சொலக்ஸ் ஒப்றிக்கல் 100, கண்டிவீதி, சாவகச்சேரி. 0777 855328
K. மதிஅழகன் வல்லை றோட், சங்கானை. 0712 358019, 0777 243203
சுதன் கொமினிக்கேசன் மிருசுவில். 0777 584876
சோதி கொமினிக்கேசன் வலுப்போடை, களபூமி, காரைநகர். 0712 370480
V. அரவிந்தன் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். 0777 550949
R. தயாகரன் வட்டுக்கோட்டை. 0777 244524
சிவராசா லக்கி எலற்றோனிக்ஸ் மானிப்பாய்.
[C/6670]

அனைவருக்கும் எமது தீபாவளி
வாழ்த்துக்கள்
சிந்திசன் ரெயிலர்ஸ்
315A, பலாலி வீதி, திருநெல்வேலி.

யாவருக்கும் தித்திக்கும் தீபாவளி
வாழ்த்துக்கள்
ஹரன் வெல்டிங் வேக்ஸ்
339, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எம்மினிய
தீபாவளி வாழ்த்துக்கள்
SELVA MOTORS
217, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவர்க்கும் தீபாவளி நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
பிள்ளையார் ரயர் வேக்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

அனைவரது உள்ளங்களிலும் அமைதி
நிலவிட எம் இதயம் நிறைந்த தீபாவளி
வாழ்த்துக்கள்
பாடசாலை சின்னங்கள், கேடயங்கள்,
மற்றும் சில்வர் தகடுகளில் பெயர்
வெட்டுதல், இலக்கங்கள் வெட்டுதல்
போன்ற சேவைகளுக்கு நாடுங்கள்
லிங்கம்
உலோகத் தொழிலகம்
264, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அகிலமெல்லாம் அருள் ஒளி பரவ எமது
தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
உங்கள் கண்களை பரிசோதித்து அழகு நிறைந்த
கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக்
கட்டிக் கொள்ளவும்.
மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்
இன்றே நாடுங்கள்
எரிக்கனேஸ்



564, 566, ஆஸ்பத்திரி வீதி, [C/6672] யாழ்ப்பாணம்.

# தீபத்திருநாள் சிறப்பிதழ்

அனைவருக்கும் எமது உளம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
யாழ். நகரில் தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற ஸ்தாபனங்கள்



## சாரங்கா நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, PHONE/FAX: 021 -222 2480 யாழ்ப்பாணம்.

## அருள் முருகன் நகையகம்

96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்

45, கஸ்தூரியார் வீதி, [C/6685] யாழ்ப்பாணம்.

---

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்



## பிரம்யா நகை மாடம்

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல தெரிவு செய்திட நாடுகள்

## PRAMYA NAHAI MADAM

யாழ்வீதி, ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
T.P: 021 222 3600 உரிமையாளர்: T.V.பாலன்
[C/6680]

---

எல்லோருக்கும் எம் இதயம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உன்னத கலைநயம் மிக்க எழிலுறும் தங்க நகைகளுக்கு



## பிரசாத் நகை அகம்

177GN, கஸ்தூரியார் வீதி, [C/6681] யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும் உளங்கனிந்த தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## போட்டோ ரவி அன் வீடியோ

நவீன டிஜிட்டல் வீடியோ கமரா மூலம் சிறந்த மிக்சிங் முறையில் வீடியோ படப்பிடிப்புக்கும், ஸ்ரில் கலர் படப்பிடிப்புக்கும் ஸ்ரில் கலர்ப் படங்களை டிஜிட்டல் வடிவமைப்பில் அல்பம் கட்டிப் பெற்றுக்கொள்ளவும் உங்கள் வீடியோ கசற்களை CDயில் பதிவு செய்யவும் நாடவேண்டிய இடம்

## PHOTO RAVI AND VIDEO

தொலைபேசி: 0777 -110015
021 - 2226921
139, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் முன்பாக) யாழ்ப்பாணம்.
[C/6682]

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது தீபாவளி இனிய வாழ்த்துக்கள்



## BIRUNTHAA JEWELLERS

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளுக்கு

## பிருந்தா ஜுவல்லர்ஸ்

297(301) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[C/6684]

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அக மகிழ்கிறார்கள்



உன்னது கலைநயம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்திட சிறந்த ஸ்தாபனம்

## திருமகள் ஜுவல் கிறாப்ற்

இல:11Aஇராமநாதன் வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
[C/6683]

---

அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எம் இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

எழிலும் உறுதியும் நிறைந்த நவீன ரக தளபாட வகைகளுக்கு



## திரேசா தளபாட மாளிகை

137, கஸ்தூரியார் வீதி, PHONE: 071- 2373369 [C/6686] யாழ்ப்பாணம்.

# தீபத் திருநாள் சிறப்பிதழ்


அனைவருக்கும்

**ஊஷாவின்** இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## BIRLA YAMAHA ஜெனரேட்டர்


மாபெரும் அதிரடி விலைக் கழிவுடன் ஜப்பானிய தொழில்நுட்பம்

மண்ணெண்ணையில் செயற்படுவது

✻1லீற்றர் மண்ணெண்ணையில் 3மணி நேரம் செயற்படும். ✻600V மின்சாரத்தை வெளியிடும்.

✻இலகுவாக எடுத்துச்செல்லக் கூடியது. ✻கையாள்வது எளிது.

✻கடைத்தொகுதி, அலுவலகங்கள், வீடுகள் ஆகியவற்றில் பாவனையில் உறுதிப்படுத்தப்பட்டது. மிகப் பொருத்தமானது.



L.G அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவு பெற்ற விற்பனையாளரிடம்.

## ஊஷா ஏஜென்சி

உங்கள் தெரிவுக்கு ரந்துங்கள்
நைரிடுப்பு உள்ளவரை மட்டுமே **ஊஷா ஏஜென்சி**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C/6700]



வாரி வளவு கற்பக விநாயகர் துணை

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்து எமது மக்களின் சுபீட்ச வாழ்விற்காக இறையருளை வேண்டி நிற்கின்றோம்.



- ✶சகலவிதமான கட்டிடப் பொருட்கள்
- ✶பெயின்ற் வகைகள்
- ✶மிற்சுயி, கினேடி சீமெந்து
- ✶CALTEX கல்ரெக்ஸ் எண்ணெய் வகைகள்
- ✶போனக்ஸ் PHONEX பிளாஸ்ரிக் உபகரணங்கள்

போன்றவற்றை

**மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்**

## கஜமுகன் காட்வெயார்ஸ்

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 2833

[C/6699]

# தீபத்திருநாள் சிறப்பிதழ்


யாவருக்கும் எம் இதயம் நிறைந்த தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உண்டு மகிழ நாடுங்கள்

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

401, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6692)

எல்லோருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

**கலாலயா பயிற்சியகம்**

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6691)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் யாவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சுவையான சைவ உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும், உண்டு மகிழவும்

**சண்முகம் சைவ உணவகம்**

10, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6694)

அன்புள்ளங்கள் யாவருக்கும் எம்மினிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

★ DUCO ★ GLIDDEN EMULSION ENAMAL
★ DULUX
PENTALITE PLUS ★ NECOL

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றிட

**சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்**


70/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2763 (C/6693)

உ
வாரிவளவு கற்பகவிநாயகர் துணை

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

அறிமுகம் :- **பிறீடம் மோட்டார் சயிக்கிள்**




**FREEDOM L.M.L**

லுமாலா, கீரோ, சயிக்கிள் உதிரிப்பாகங்கள் ரேடியோ, TV, டெக் மற்றும் இதர பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

50, 52, 5A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 222 2988, 222 3096 (C/6690) தொலைநகல்: 222 2368





# தீபத் திருநாள


## வட்டு - சிவன் தொலைத்தொடர்பகம்

உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவை – உள்நாட்டு வெளிநாட்டு தொலைநகல் சேவை (FAX)

| | |
|---|---|
| போட்டோ பிரதிகள்<br>அடையாள அட்டை கவரிடுதல் (Laminating)<br>இன்ரநெற், ஈ.மெயில் சேவை (Internet & e-mail | கணனிப் பிரதியாக்கம் (Color, Black & White)<br>(Computer Printing & Scanning)<br>CD to CD Writing (Video & Audio) |

தொலைபேசி:– உள்நாடு 021 222 3734 & 060 2212470 வெளிநாடு 0094 – 212223734 & 0094 0602212470

சிவன் கோவிலடி, வட்டுக்கோட்டை.

அரிசிமா மற்றும் சகலவிதமான தானிய வகைகளும் சிறந்த முறையில் அரைத்துப் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்

## புதிய சாந்தி மில்

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

யாம்பெற்ற இன்பம் பெறுக
இவ் வையகமெல்லாம்

வலி. மேற்கு வலம்புரி வாசகர் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உடன்

மாபெரும் மலிவு விற்பனை தீபாவளி, கிறிஸ்மஸ், தைப்பொங்கலை முன்னிட்டு 2003 டிசெம்பர் 31 வரை மலிவு விற்பனை

எம்மிடம் உள்ள சகல விதமான கட்டிடப் பொருட்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், மின்சார உபகரணங்கள், பெயின்ற் வகைகள், PVC இணைப்புக்கள், மின்மோட்டர் அதற்குரிய இணைப்புக்கள், நீர்த்தாங்கிகள், கல்வனைஸ் பைப்புகள் மற்றும் சகலவிதமான இரும்புப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## சச்சியா இரும்பகம்

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

## S.M.T. பந்தல் சேவை

எம்மிடம் மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற சகலவிதமான பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## S.M.T. பந்தல் சேவை

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை

T.P:– 0602 212965, 0777 432188

## அம்பாள் இரும்பகம்

சகல விதமான கட்டிடப் பொருட்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், கல்வனைஸ் பைப்புகள், PVC குழாய்கள் மற்றும் சகல விதமான இரும்புப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## அம்பாள் இரும்பகம்

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

## டிலா வீடியோ அன் போட்டோ

டிஜிற்றல் முறையில் வீடியோப்படம் பிடிப்பதற்கும் அதனைக் கணனி முறையில் தொகுத்து வழங்குவதற்கும் அத்துடன் வெளிப்புறப் படப்பிடிப்பாளர்களுக்கும் கணனி மூலம் தொகுத்து வழங்கப்படும் இன்றே நாடுங்கள்

## டிலா வீடியோ அன் போட்டோ

பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

கொம்பியூட்டர் பிறிண்டிங் பழைய, புதிய திரைப்படப்பாடல்கள், பக்திப்பாடல்கள் CDயிலும் கெசற்றிலும் டிஜிற்றல் முறையில் பதிவு செய்து கொள்ளவும் திரைப்படப் பிரதிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரேஇடம்

## மைக்ரோ ரவர் அன் மியூசிக் சென்ரர்

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

சொகுசான உள்ளூர் பயண சேவைக்கு கார் மற்றும் AC வான்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## தேவா ரவல்ஸ்

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

T.P. 021 222 5459, 077 6143541

## புவிசன் வீடியோ சென்ரர்

சகல விதமான வீடியோ பிரதிகள், CD பிரதிகள், TV, டெக், டெக்ஸ் செற் மற்றும் ஓடியோ, வீடியோ பதிவு செய்து பெற்றுக் கொள்ள

## புவிசன் வீடியோ சென்ரர்

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.


மலர் அமைப்பு:-
வட்டுகோட்டை
செய்தியாளர்
ப.தேவகுமார்


உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## கிருஷ்ணா தொலைத்தொடர்பகம்

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

தொ.பே:– 021 222 5890.

## இன்று ஒரு தகவல்

# கோதுமை!

ஒருவர் வீட்டிற்குச் சென்றார். பசி வயிற்றைக் கிள்ளியது "சாப்பாட்டை எடுத்துவை" என்றார் மனைவியிடம். மனைவி சொன்னார்" தோசையும் கொள்ளுச்சட்னியும் தரவா!? " என்று கேட்டார். இவருக்கோ கோபம் வந்து விட்டது. "என்னை என்ன குதிரை என்றா நினைத்தாய்? கொள்ளுச் சாப்பிட" என்று கத்த ஆரம்பித்து விட்டார். " சரி கேழ்வரகு இருக்கின்றது களி செய்து தரவா?" என்று கேட்டார். "நீ என்ன பெரிய ஜெயில் அதிகாரியா? எனக்குக் களி தருவதற்கு" என்று கத்தினார். இவரை எப்படிச் சமாளிப்பது என்று மனைவிக்குத் தெரியவில்லை. சிறிது யோசனை செய்து பார்த்தார். "சரி கோதுமை ரவா இருக்கின்றது. உப்புமா செய்து தரவா?" என்று கேட்டிருக்கின்றார். "என்னை என்ன வியாதிக்காரன் என்று நினைத்து விட்டாயா ? என்று மீண்டும் கத்த ஆரம்பித்து விட்டார். கடைசியாக மனைவி ஒரு உபாயத்தைக் கடைப்பிடித்திருக்கின்றார். அதன் பின அவர் சரியாகி விட்டார். எதுவாக இருந்தாலும் உண்ணும் அளவிற்குத் திருந்தி விட்டார். மனைவி அப்படி ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை. வீட்டிலே ஒன்றுமில்லை என்று கூறி ஒரு நாள் முழுதும் பட்டினி போட்டார். அதன் பின் அவர் எதையும் சாப்பிடத்தயார்.

கோதுமை உப்புமா சாப்பிடுகின்றீர்களா என்று கேட்டால் எனக்குச் சர்க்கரை வியாதியா என்று கேட்டார் அல்லவா? அதிலும் விஷயம உண்டு. இருதய நோய் நீரிழிவு நோய் போன்றவற்றைத் தடுப்பதற்குக் கோதுமையில் உள்ள நார்ச்சத்து மிகவும் உபயோகப்படுகின்றதாம். ஆதிகாலத்திலிருந்தே கோதுமைக்கும் மனிதனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது.

எகிபது நாட்டில் நைல் நதிக் கரையின் ஓரத்தில் கிடைத்த பழங்காலத்துக் கல்வெட்டுக்களில் கூட கோதுமையைப் பற்றிய விபரங்கள் இருக்கின்றதாம். அதிலே கோதுமையை எப்படிப் பயிரிடுவது, அறுவடை செய்வது, தானியமாக்குவது, உணவு தயாரிப்பது போன்ற விடயங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றதாம். அது மட்டுமல்ல அங்குள்ள சில கல்லறைகளைத் தோண்டிப் பார்த்தால் இறந்தவர்களோடு சேர்த்துக் கோதுமை பயிரிட்டவர்களையும் புதைத்து வைத்திருக்கின்றார்களாம்.

இன்று 25 நாடுகளில் அரிசி முக்கிய உணவாகக் கொள்ளப்படுகின்றதாம். 45 நாடுகளில் கோதுமை அடிப்படை உணவாகக் கொள்ளப்படுகின்றதாம். அகத்தியர் குணபாடம் என்று ஒரு நூல் உண்டு. கோதுமை அக்காலத்தில் ஓர் மருந்துப் பொருளாகப் பயன்பட்டது எனும் விபரம் அதில் இருக்கின்றது. கோதுமையை சோறாக்கிச் சாப்பிட்டால் தேகபலம் கூடும். உடைத்து நொய் ஆக்கி கஞ்சி காய்ச்சி உண்டால் வாதம், தடிமன், கபம் எல்லாம் நீங்கி விடும். அரைத்து மாவாக்கி அடை செய்து கொண்டால் உடல் வன்மை அதிகரிக்கும். இந்த விபரங்கள் எல்லாம் அந்த நூலில் உண்டு.

இப்போதும் கூட டாக்டர்கள் கோதுமையை சிபாரிசு செய்கின்றனர். கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவைப்படும் புரதம், இரும்பு விற்றமின்பி சத்துக்கள் எல்லாமே கோதுமையில் இருக்கின்றதாம். இதில் இன்னுமோர்விசேஷம் என்னவென்றால் கோதுமை உணவைக் கொஞ்சமாக உண்டாலும், நிறைய உணடது போன்ற நிறைவு ஏற்படும். அதனால் உண்ணும் அளவு குறைந்து விடும். எனவே தான் குண்டாக இருப்பவர்களுக்குக் கோதுமை உணவை சிபாரிசு செய்வார்கள்.

காவேரி ஓரமாக விளையும் வெற்றிலையைக் கொடுத்து விட்டுக் கங்கை ஓரமாக விளையும் கோதுமையை வாங்குவோம் என்றார் பாரதியார். "கங்கை நதிப் புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்குமாறு கொள்வோம் என்றார். கோதுமைப் பலகாரத்தை உண்ட பின் வெற்றிலை போட்டுவிட்டு அமர்ந்தால் அதுவும் ஒருவிதமான சுகம் தான்.

அந்தக்காலத்தில் கோதுமை அதிகமாக விளையும் ஒரு தேசமிருந்தது. அதற்கு ஒரு ராஜா இருந்தார். அவர்ஒரு நாள் தனது அமைச்சரைக்கூப்பிட்டார். " என்ன அமைச்சரே! நம்மிடம் கையிருப்பில் உள்ள கோதுமை இன்னும் எவ்வளவு நாளைக்கு வரும்?" என்று கேட்டார். "இன்னும் 2 வருடங்கள் இருக்கும் மகாராஜா" என்றார் அமைச்சர். இதைக்கேட்டதும் ராஜா மிகுந்த சந்தோஷமடைந்தார். "அப்படி என்றால் இன்னும் 2 ஆண்டுகளுக்கு நமது நாட்டில் பஞ்சமே இல்லை" என்றார். மிகுந்த மகிழ்ச்சியோடு அமைச்சர் தயக்கத்துடன் அரசனை நெருங்கினார். " அப்படி அல்ல மகாராஜா நான் கூறியது நம் இருவரின் வீட்டிலும் உள்ள கோதுமையைப் பற்றி" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இன்னல்கள் இடையூறுகள் மத்தியில் யூனியன் கல்லூரி இயங்கி வருகிறது

## பாரிசுத்தின விழாவில் அதிபர்

(யாழ்ப்பாணம்)

அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காரணத்தினால், பல இன்னல்களையும், இடையூறுகளையும் எமது யூனியன் கல்லூரி எதிர்கொண்டு வருகிறது.

இக் கல்லூரியைச் சொந்த இடதில் செயற்பட வைப்பதற்குப் பாடுபட்ட வேகத்திற்கு எதிர்மாறாக, கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக அரசியல் நீரோட்டத்தில் இணைந்தவர்கள் இன்று நடந்து கொள்கின்றமை வேதனை தருகிறது.

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பரிசுத் தினவிழாவிற்குத் தலைமை தாங்கிய கல்லூரியின் அதிபர் எஸ். புண்ணியசீலன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இடம்பெயர்ந்த காலத்தில் இருந்த மாணவர் வளம், சொந்த இடத்திற்கு கல்லூரி வருகை தந்ததும் பெருகியது. 852 மாணவர்களைக் கொண்டிருந்த நிலை மாறி இன்று 1022 மாணவர்கள் கற்கும் நிலை உருவாகியுள்ளமை, மாணவர் கல்லூரி மது கொண்ட நம்பிக்கையை வெளிக காட்டி நிற்கின்றது என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் உரையாற்றுகையில்,

எதையும் எதிர்க்கின்ற தம்மைத் தாமே மேதாவிகள் எனக் கருதிக் கொள்கின்ற மாணவர் சமுதாயமே இன்று பாடசாலைகளில் உருவாகி வருகின்றது.

இது ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கோ சமூக வளர்ச்சிக்கோ பொருதப்பாடான நிலைமையல்ல.இவ்வாறான நிலைமையே இன்றைய கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்க பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாதது என்றார். (உ)

## இராசி பலன்

**24. 10. 2003**

**(ஐப்பசி 7, வெள்ளி)**

**சதுர்த்தசி - மு.இ.9.25வரை -**

**அத்தம் - மு.இ. 7.14 வரை**

**இராகுகாலம் - 10.32 -12.02**

**சுபநேரம் - 6.2-07.32**

**அமிர்த சித்தம், தீபாவளி**

**ஐப்பசி வெள்ளி**

**மேடம்**

விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு , மனமகிழ்ச்சி, தேகஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்**

காரிய இடையுறு, பணத்தட்டுப்பாடு, அஜீரண ரோகம்,மனக்கவலை.

**மிதுனம்**

தன்னம்பிக்கைக் குறைவு, புதிய விடயம், வேலையில் அசமந்தம், முயற்சி தாமதம்.

**கடகம்**

நற்கீர்த்தி, மாதர் நட்பு, அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம்.

**சிங்கம்**

போசன சுகக்குறைவு, எந்தக்காரியத்திலும் தாமதம்,சகோதரர் உதவி, தனவிரயம்.

**கன்னி**

தெய்வ தரிசனம், வெகுமானம், சிந்தனை மிகுதி, முயற்சி கைகூடும்.

**துலாம்**

உணர்ச்சி வசப்படல்,சோம்பல் நிலை, தொழில் கஷ்டம், தனவிரயம்.

**விருச்சிகம்**

நண்பர்கள் சந்திப்பு,நினைத்த காரியம் நிறைவேறும், பொருள் சேர்க்கை.

**தனுசு**

நன்கொடை,பெரியோரால் மரியாதை, எடுத்த கருமங்கள் கைகூடும், மேன்மை.

**மகரம்**

தேசாந்திரவாசம், ரோக நிலை, சரீரப் பிரயாசை, மனப்பதட்டம்.

**கும்பம்**

முழங்கால் வலி, பொருள் விரயம், காரியதாமதம், திருடர் பயம்.

**மீனம்**

எடுத்த காரியம் கைகூடும், அபு,ர்வ சந்திப்பு, தெய்வதரிசனம், கலந்துரையாடல்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# சிறந்த விமானப் போக்குவரத்து மையமாக இலங்கை திகழும்

(கொழும்பு)

இலங்கையும்-இந்தியாவும் கைச்சாத்திட இணங்கி இருக்கின்ற உத்தேச விமானப் போக்குவரததுத் தொடர்பான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, ஆசியாவின சிறந்த விமானப போக்குவரத்து மையமாக இலங்கையை மாற்றுவதற்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் பட்சத்தில் இலஙகை தேசிய விமானசேவை அமைப்பான சிறீலங்கன் எயார்லைன் நிறுவனம் இந்தியாவில் சென்னை மும்பை கொல்கததா, புதுடில்லி ஆகிய அனைத்து நகரங்களுக்கும் தேவையான எண்ணிக்கையில் விமானங்களை சேவையில ஈடுபடுத்துவதற்குத் தயாராகவுள்ளது.

அதேபோல், இந்தியாவில் உள்ள 4 முக்கிய விமான நிறுவனங்களும் இலங்கைக்கான விமானசேவையினை நடத்த முன்வந்துள்ளன.

இதனால் இலங்கை-இந்திய நாடுகளில் உள்ள விமான நிலையங்கள் குத்தகை அடிபபடையில் விமான சேவைகளை நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதிகரித்த விமான சேவை காரணமாகப் பயணிகள் குறைந்த கட்டணததுடன் பயணத்தை மேற்கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-60,10)

# வீதி விபத்துக்கள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலங்களாக ஏற்பட்டு வரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன், பாடசாலை மாணவர்களிற்கு இது தொடர்பான விழிப்புணர்வுக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் விசேட படையணிகளும் ஒழுங்குகளை செய்துள்ளது.

இக் கலந்துரையாடல்கள் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடந்த 20ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் இ.சற்குருநாதன் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடல்களில் மக்கள் நலன்புரிச் சங்க போக்குவரத்து வீதி ஒழுங்குத் தொண்டர்களும், யாழ்.பொலிஸ் நிலைய போககுவரத்துப் பிரிவுப் பொலிஸாரும் கருத்துக்களை வழங்கி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு இக் கலந்துரையாடல்கள் பூர்த்தியான பின்னர் பிரதேச செயலர் பரிவு ரீதியாக உள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாய மீனவர், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஊடாக விழிப்புணர்வை வழங்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-252)

# ஆலயத்தைஅகற்ற உத்தரவு

(கந்தர்மடம்)

தருமபுரம் அரசினர் வைத்திய சாலைக்கு முன்பாக அமைந்துள்ள ஆலயத்தினை அகற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் வைத்து கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் கிளிநெச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்திய மூர்த்தியிடம் மேற்படி பணிப்புரையைவிடுத்துள்ளார்.

தருமபுரம் பிரதானவீதிக்கருகாமையில் மேற்படி ஆலயம் மைந்துள்ளதன் காரணத்தினால், வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பேற்பட்டுள்ளதுடன் பல மனித உயிர்களை அநியாயமாகக் காவு கொள்வதற்கு வாய்ப்பாகி உள்ளதென கிளிநொச்சி அரச அதிபர் கூறியுள்ளார்.

(பி-85)

# விவசாய தொழிற்துறையை வன்னியில் ஊக்குவிக்க முயற்சி

(தனங்கிளப்பு)

விவசாயத் தொழில் நுட்பத் துறையை வன்னியில் ஊக்குவிக்கும் முகமாக வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினால், ஜினசேனா கொம்பனி மற்றும் விவசாய நிறுவனங்களின் அனுசரனையுடன் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் வேளாண் பொறிகள் குறித்த செயல் விளக்கம் அளித்தல் அமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

இநநிகழ்விற்கு வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன மேலாளர் இ.புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். தமிழீழத் தேசியக் கொடியினை நிறுவனப் பணிப்பாளர் குலம் ஏற்றிவைத்தார். ஜினசேன நிறுவனப் பொறியியலாளர் இராஜபக்ஷ கேவீஷ் நிறுவன உத்தியோகத்தர் முதலானோர் நிகழ்வினில் பங்கு கொண்டு பயிற்சியை நெறிப்படுத்தினர்.

முன்னதாக கிளிநொச்சி ஜனசக்தி பிரதேச செயலாளர் பொன் நித்தியானந்தன் மங்கள விளக்கேற்றி செயல் அமர்வினை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளைத் தலைவர் கே.கார்த்திகேசு சங்கப் பொருளாளரும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான கே.வி.கே. திருலோக மூர்த்தி பனை அபிவிருததிச்சபை கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஏ.வி.கே. மாணிக்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

(பி-37)

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய பாவிக்காத L.G சலவை இயந்திரம் விற்பனைக் குண்டு. தொடர்பு நடராஜா 73/1, கலட்டி அம்மன் தெரு, வண்ணார் பண்ணை, வடகிழக்கு யாழ்ப்பாணம. தொலைபேசி: 021- 222 5488

(7726)

### தவறிவிட்டது

ஈஸ்வராணந்தன் கயஸ்தன் என் பவருடைய அஞ்சல் அட்டை (இல. 007890)தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் 73/3,கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(7725)

# கொரியநாட்டு சுதேச மருத்துவர்கள் யாழில் 4 தினங்கள் இலவச சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இலவச சுதேச மருத்துவ சேவை முகாமினை நடத்தும் பொருட்டு எதிர் வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி கொரிய நாட்டைச் சேர்ந்த 15 சுதேச மருத்துவர்களும், மருத்துவ உதவியாளர்களும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்கள் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் சகல விதமான வாதரோகம், தலைவலி, பாரிச வாதம், மூட்டுவலி, இடுப்புவலி, முள்ளந்தண்டு, கழுத்து, கைமூட்டு வலி, சுவாசரோகம், இரத்த அமுக்கம், சர்மரோகம் பேன்ற சகல ரோகங்களுக்கும் முற்றிலும் இலவசமாக சிகிச்சை வழங்கவுள்ளனர்.

மேற்படி குழுவினருடன் சுதேச வைத்திய இடர் நிவாரண அமைச்சின் செயலாளர், ஆயுள்வேத ஆணையாளர் மற்றும் அதிகாரிகளும் மேற்படி முகாமினை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இதேவேளை, நோய்களுக்கான சிகிச்சைகள்யாவும் குறிப்பிட்ட 4 நாட்களிலும் மு.ப.9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரையும் நடைபெறும் எனவும், எனவே இம் முகாமில் கலந்துகொள்ள விரும்புவோர் கைதடி சித்த ஆயுள் வேத வைத்தியசாலையிலும், பிரதேசசபை, மாநகரசபை ஆகியவற்றின் கீழ் இயங்கும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையிலும் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கொரியநாட்டு சுதேச மருத்துவக்குழுவினரால் நடத்தப் படவிருக்கும் இலவச மருத்துவ சேவை முகாமிற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(உ-10)

## மக்கள் வங்கிக்கிளைகளில் இன்று மதியம்வரை சேவை

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் புனித தினமான இன்றைய தீபாவளித் திருநாளில் மக்கள் வங்கியின் சகல கிளைகளும் கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 9.00மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் திறக்கப்படவுள்ளது.

அத்துடன் இன்று 10 ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை ஒருவருட காலத்திற்கு சேமிப்புக்கணக்கிலிடும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அழகிய தீப விளக்கொன்று அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. (உ)


**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால்**
**மிதிவெடி,வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான**
**சுய முயற்சிக்கடன் வழங்கல் திட்டம்**

மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும்,தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் 3ஆம் கட்டமாக சங்கானை,தெல்லிப்பழை,உடுவில்,யாழ்ப்பாணம் மற்றும் தீவகப் பிரதேச செயலர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப் புற்றவர்கள் இம்மாதம் 27, 28ஆம் திகதிகளில் (திங்கள்,செவ்வாய்) காலை 10.00-2.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

**உங்கள் தொடர்புகளுக்கு:**

ஊனமுற்றோர்புனர்வாழ்வுச்சங்கம்,
47;2, ஆடியபாதம்வீதி,
(மருத்துவ பீடம் அருகில்)
திருநெல்வேலி.

(6766)


## தீபாவளி நிகழ்ச்சிகள் 'ஐ'அலைவரிசையில் இன்றுஒளிபரப்பு

(கொழும்பு)

இந்துசமய விவகார அமைச்சினால் நேற்று கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடாத்தப்பட்ட தேசிய தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் தீபாவளி தினமான இன்று இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஐ அலைவரிசையில் மறு ஒளிபரப்பு செய்யப்படவுள்ளன.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவைப் பிரிவின் பொறுப்பாளர் எஸ்.விஸ்வநாதன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

இன்று மாலை 5மணி தொடக்கம் 6.00 மணிவரையும் 7.00 மணி முதல் 9.00மணிவரையும் இவ் மறு ஒளிபரப்பு இடம்பெறவுள்ளது.(உ-)


**சுன்னாகம் வாழ்வகத்திற்கு அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை**

மேற்படிவாழ்வகத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவை.

1). சமையல் அனுபவம் உள்ள வேலையாள்(பெண்) வயதெல்லை 50க்கு மேல் இருக்க வேண்டும். வெற்றிடம் ஒன்று.
2). மேற்பார்வையாளர் (பெண்) வயதெல்லை 50க்கு மேல் இருக்கவேண்டும். கல்வித்தகமை க.பொ.த. (உ/த) தமிழ், ஆங்கிலம் பேசக்கூடிய ஆற்றல்உள்ளவராய்இருக்கவேண்டும்.
3). தோட்ட வேலையில் திறமை மிக்க தொழிலாளி (ஆண்) வயதெல்லை 45க்கு மேல் இருக்கவேண்டும்.

வாழ்வகத்தில் தங்கியிருந்து கடமை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஒக்டோபர்2003,31ஆம் திகதிக்கு முன் கடமை நாட்களில் கீழ்காணப்படும் ஆவணங்களுடன் வருகை தரும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்

(அ) இருநற்சான்றிதழ்
(ஆ) தேசிய அடையாள அட்டை
(இ) கல்விச் சான்றிதழ்
(ஈ) சுய விபரக்கோவை

போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படமாட்டாது.

**நிர்வாகி.**
**வாழ்வகம்,**

(7681)


# காஷ்மீர் வன்செயல்களுக்கு முடிவுகட்ட இந்தியா புதுமுயற்சி

## குரியஸ் அமைப்புடன் அத்வானி பேச்சுநடத்துவர்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் பல வருடங்களாக தொடர்ந்து வரும் வன் செயல்களுக்கு முடிவுகட்டும் முயற்சிகளில் இந்தியா தீவிர கவனம் செலுத்த முடிவு செய்துள்ளது.

அந்த வகையில் ஒரு முக்கிய நடவடிக்கையாக தனிநாடுகோரிப் போராடிவரும் குறியஸ் அமைப்புடன் இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது.

இந்தப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியின் தலைமையில் மத்திய அரசின் சார்பில் குழுவொன்று நியமிக்கப்படுகின்றது.

இப் பேச்சுவார்த்தை எப்போது நடைபெறும் என்பது குறித்து பின்னரே தீர்மானிக்கப்படும் என இந்திய அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா அரசின் இந்த அறிவிப்புக்கு, குறியஸ் அமைப்பின் நிறைவேற்று அதிகார சபை மிக விரைவில் கூடி ஆராயப் பேவாதாக அதன் தலைவர் மௌலானா அப்பாஸ் அன்ஷாரி கூறியுள்ளார்.

பல வருடங்களாக ஜம்மு -காஷ்மீர் பகுதியில் தொடரும் வன் செயல்களால் பல உயிர்கள் பலி கொளளப்பட்டு வருகின்றன.

இது மேலும் தொடர்ந்து கொண்டே செல்லுமானால் அது அதன் அயல்நாடுகளை பெரிதும் பாதித்துவிடும்.

இதனை முற்று முழுதாகத் தடுத்து நிறுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாகவே இப்பேச்சு வார்த்தை நடத்தப்படுவதாகவும், இப் பேச்சுவார்த்தை மூலம் மிக விரைவில் காஷ்மீர் பகுதியில் இடம் பெற்றுவரும் வன்முறைகளுக்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை காணப்படுவதாகவும் இந்தியத் தரப்பு செய்திகள் கூறுகின்றன.

இதனிடையே இந்தியாவுடன் விமானப் போக்குவரத்து தொடர்புகளை ஏற்படுத்துவது மற்றும் நாட்டுக்கு மேலே விமானங்கள் செல்வது தொடர்பான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்த தயார் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

பாகிஸ்தான் திறந்த மனதுடன் வருமானால் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தலாம் என்று இந்தியா கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தது.

இதற்கு பதிலாகவே பாகிஸ்தான் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தியாவின் முக்கிய நகரங்களிலிருந்து பாகிஸ்தானில் உள்ள முக்கிய நகரங்களுக்கு தரைவழி, கடல்வழி போக்குவரத்துக்களை ஆரம்பிப்பதற்கும் ஜம்மு காஷ்மீரில் இருந்து ஆசாத் காஷ்மீரிலுள்ள நகரங்களுக்கு போக்குவரத்துக்களை ஆரம்பிப்பது பற்றி இந்தியா சில புதிய யோசனைகளை அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுடனான பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இந்தியா பல புதிய நடவடிக்கைகளை எடுக்க முன்வந்திருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

(பி-2)

## ரயில் விபத்தில் 7 பேர் பலி

(சென்னை)

தென்னிந்தியாவில் பயணிகள் ரயில்வண்டிஒன்று தண்டவாளத்தை விட்டு விலகி விபத்துக் குள்ளானதில் 7 பேர் பலியானதுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் மைசூரிற்கும் பெங்கலூரிற்கும் இடையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து உடன் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் இவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பி-02)

## வன்செயல்கள் அதிகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் கல்லூரிகளில் இடமபெறும் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அந்நாட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இதுவரை அமெரிகக் கல்லூரிகளில் இடம்பெற்றுள்ள வன்செயல்களால் 18 பேர் உயிரிழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்தாகும்.(பி-2)

### உலக தரிசனம்

## ஈராக் புனர்நிர்மாணப் பணிகளுக்கு உலக வங்கி 500 கோடி டொலர் நிதியுதவி

(நியூயோர்க்)

ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு 300முதல் 500 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியுதவி வழங்கவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

அடுத்தவாரம் ஸ்பெயின் தலைநகர் மாட்றிற்றில் நடைபெறவுள்ள ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உலகவங்கி இது பற்றி விபரமாக அறிவிக்கவுள்ளது.

இந்த மாநாட்டில் 70ற்கும் மேற்பட்ட நாடுகள் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈரானும் இம் மாநாட்டில் பங்கு பற்ற உள்ளதாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளும், உலக வங்கியும் இணைந்து ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கு தேவைப் படும் நிதிபற்றி மதிப்பீடு செய்ததன் படி புனரமைப்புப் பணிகளுக்கு சுமார் மூவாயிரத்து 600கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப் படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2006ஆம் ஆண்டு மார்ச் வரை ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கு 495.7 மில்லியன் டொலர்கள் நிதியுதவியாக வழங்க பிரிட்டின் திட்டமிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜேர்மனி, ஜப்பான், தென்கொரியா, ஸ்பெயின், சுவீடன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் வழங்கவுள்ள நிதி உதவித் தொகைகள் பற்றி ஏற்கனவே அறிவித்துள்ளன.

(பி-02)

## 6 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள போதைப் பொருள் கடத்தல் பாகிஸ்தானில் முறியடிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் ஆயிரம் கிலோ போதைப்பொருட்கள் கடத்தல் முயற்சி ஒன்றை முறியடித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்கு கடத்த முயற்சிக் கப்பட்ட இந்தப் போதைப் பொருட்களின் பெறுமதி 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப் பிடப்பட்டுள்ளது.


கடத்த முற்பட்டவர்களுக்கும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகவும் பின்னர் கடத்தல்காரர்கள் வந்த வாகனத்தை விட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் வருடம் ஒன்றுக்கு மூவாயிரத்து 400 தொன் ஓபியம் என்னும் போதைப்பொருள் தயாரிக்கப்படுவதாகவும் இவற்றுள் நான்கில் ஒருபங்கு பாகிஸ் தானுக்கு கடத்தப்படுவதாகவும் பாகிஸ்தானிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

(பி-02)

# ள் சிறப்பிதழ்






உங்கள் திருமண வைபவங்களிற்கும் மற்றும் மங்களகரமான
வைபவங்களிற்கும் எல்லா வகையான உணவு வகைகளைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**K.P. கேற்றறீஸ் சேவிஸ்**

மற்றும்

**யாழ். – கொழும்பு தினசரி சொகுசு பஸ் சேவையும்**

சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை.
தொ.பே. 077–7111725

அரிசி மா மற்றும் சகலவிதமான தானிய
வகைகளும் சிறந்த முறையில் அரைத்துப்
பெற்றிடவும், அரிசி வகைகளை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**பாலன் மில்**

மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை.

சகல இலத்திரனியல் உபகரணங்கள்
திருத்துனர்களும் விற்பனையாளர்களும்

**பிறின்ஸ் எலற்ரோனிக்**

பிரதான வீதி, சங்கானை
தொ.பே. 0777-477200

இந்நிறுவனம் 2004ம் ஆண்டு ஜனவரி 15ஆம்
திகதியில் இருந்து பிரதான வீதி, சித்தன்
கேணியில் இடம்மாற்றப்படவுள்ளது என்பதை
வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

தினசரி யாழ் கொழும்பு சொகுசு பஸ்சேவையும்
உங்கள் பொதிகளை உடனுக்குடன் குறித்தநேரத்தில்
கொண்டு சேர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்

**ஸ்ரீராஜ் தொலைத்தொடர்பகமும்**
**பயண சேவையும்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை
தொ.பே. 021 222 5536, 060 212343, 071 2347520

சகல விதமான வாகனங்களும் சிறந்த முறையில்
சேவிஸ் செய்துகொள்ள ஒரே இடம்

**MG சேவிஸ் ஸ்டேசன்**

பிரதான வீதி,
சித்தன்கேணி.

டயலொக், மொபிற்றல் தொலைபேசி இணைப்புகள்மூலம் சிறந்த முறையில் உங்கள்
இல்லங்களில் இருந்தபடி தெளிவான முறையில் உங்கள் உறவினருடன்
உரையாடுவதற்கு சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் பொருத்தித் தருவதற்கு
நாடவேண்டிய இடம்

**V.K. ராஜ்கிருஷ்ணா தொலைத்தொடர்பகம்**

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. தொ.பே: – 021 222 5890

அழகுசாதனப் பொருட்களையும் அன்பளிப்புப்
பொருட்களையும் அத்துடன் வான் போக்குவரத்துச்
சேவையையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**ஒளிக்கதிர் அழகுமாடம்**

சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை.

உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும் மற்றும்
சகலவிதமான இலத்திரனியல் உபகரணங்களும் மின்சார உபகரணங்களும்
குளிர்சாதனப் பெட்டிகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும்
நாடவேண்டிய இடம்

**வட்டு தொலைத்தொடர்பகம்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

டிஜிற்றல் வீடியோ எடுத்திடவும் எடிற்றிங் செய்திடவும்
படம் பிடித்திடவும் நாடவேண்டிய ஒரே இடம்

**மிலேனியம் படப்பிடிப்பாளர்கள்**

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், பிளாஸ்டிக்
கதிரைகள் பாடசாலை உபகரணங்கள் பாதணி வகைகள் மற்றும்
போட்டோ பிரதிகள் அனைவற்றையும் சிறந்த முறையில் பெறுக்கொள்ள

**வலம்புரி அழகுமாடம்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

சகலவிதமான மங்கள வைபவங்களுக்கும் பந்தல்
சேவை, பாத்திர வகைகள், கதிரைகள் மற்றும்
வீடியோப்படம் பிடித்திடவும் நாடவேண்டிய ஒரேயிடம்

**குருபோட்டோ அன் வீடியோ**

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

சகல விதமான பலசரக்குச் சாமான்களும் மற்றும் கேக் சாமான்களும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**அம்பாள் ஸ்ரோஸ்**

வட்டுக்கோட்டை.

# தீபத்திருநாள் சிறப்பிதழ்

# தீபாவளிக் கவிதை மலர்கள்

## திகழவழி காட்டட்டும்!

தீந்தமிழர் வாழ் வினிக்கும்
　　தீபாவளித் திரு நாளில்
காந்தமெனக் கவர்ந் திழுக்கும்
　　கடமைதனைக் கைப் பிடிப்போம்!

மடமையெனும் கொடுமை தனை
　　மாநிலத்தி லே விரட்டி
தடைகள்தமைத் தகர்த் தெறிந்து
　　தலைநிமிர வழி படைப்போம்!

இடர் களையும் இலக்கணத்தை
　　இதமாக வே பிடித்து
திட முடனே தீமைகளைத்
　　தீய்த் துலகை வாழவைப்போம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## வழி திறக்க வேண்டும்

தீபாவளித் திருநாளே!
தேசம் குதூகலிப்பிலா...?
வினாக் குறிகளையே
மனங்கள் போடுகின்றன

காற்று காவி வருகின்ற
செய்திகளால் மனிதர்
ஏங்கிக் கொள்கின்றனர்

மலிந்திட்ட தீமைகளால்
மண் மாதா
தலைகுனிந்துநிற்கிறாள்

ஆனாலும் திருநாளில்
அருள் வேண்டியே
வரிசை வரிசையாய்
தீபங்கள் ஏற்றுகிறோம்

நல்லவை நடக்க
நாடு வளமுற
தீபாவளித் திருநாளே!
வழி திறக்க வேண்டும்

மீசாலையூர் கமலா.



## எப்படித்தான் மாறிடுமோ!

ஆண்டுக்கொரு நாள் இன்று தீபாவளி
நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் தீபாவளி
அப்பா புதுச் சட்டைகள் வாங்கித் தருவார்
அம்மா பலகாரம் இனிதே சுட்டுத் தருவாள்
அண்ணா பட்டாசுகள் கொளுத்தி மகிழ்வான்
நானும் அக்காவுடன் கோயிலுக்குச்
　　சென்றிடுவேன்
எல்லாம் நினைக்கக் கண்கள்
　　இன்று கலங்கிடுதே
எங்கள் நாட்டு நிலைமை எப்படித்தான்
மாறிடுமோ

நயினை விஜயன்

## சமாதானத் தீபாவளி

வாழ்வின் சுவைகளை
வடித்திடும் தீபாவளி
தீவின் சுமைகளை
தீர்க்கும் தீபாவளி

ஏழ்மையின் சுமைகளை
இறக்கிடும் தீபாவளி
நாட்களின் இமைகளை
நகர்த்திடும் தீபாவளி

ஓலைக் குடிசைகளின்
உவகை தீபாவளி
உழவன் கலப்பையின்
இனிமை தீபாவளி

கொடுமை அரக்கனின்
மரணம் தீபாவளி
சமாதான புறாக்களின்
ஜனனம் தீபாவளி

இருபாலை புலேந்திரராஜா
முதலியார்


கௌரி மிதிவண்டி வாணிபம்
பருத்தித்துறை வீதி
நெல்லியடி
பாதணிகள் மற்றும் சைக்கிள் உதிரிப் பாகங்கள், பெற்றோல்மக்ஸ் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் மிக மலிவாகப் பெற்றுக் கொள்ளுமிடம்.

புதிய அம்பிகா ஸ்ரோஸ்
New Ambiga Store
பிரதான வீதி　　நெல்லியடி
சகல விதமான பலசரக்கு பொருட்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

ஸ்ரீமுருகன் கொமினிக்கேசன்
மயிலியதனை　　தொண்டமனாறு
தொ.இல :- உள்நாடு 0602 - 212783
வெளிநாடு 0094602 212783
உரிமையாளர் :- ரீ.விவேகானந்தன்

மலிவு விற்பனை
மில்க்வைற் சோப் 6/= ரூபாவுக்கு மொத்தமாக விற்பனை வாகனத்திலும் தொழிற்சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்
மில்க்வைற்
த.பெ.இல.77
யாழ்ப்பாணம்
(C/6765)

அனைவருக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நியூ அல்பா மிக்ஷர்
கச்சான், பருப்பு, கடலை, பகோடா வகைகள்
மிகவும் தரமான முறையில் செய்து விற்கப்படுகின்றது
அல்பா மிக்ஷர், பிஸ்கற் வகைகள் என்பன சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, சங்கானை
தயாரிப்பு:- பக்கஸ் லேன்
உடுவில் றோட்
மானிப்பாய்


அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்
RAINBOW LINKS இன்
மாபெரும் மலிவு விற்பனை

கையடக்கத் தொலைபேசிகள், மொபிற்றல் தொலைபேசிகள் என்பனவற்றை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

இவ் விலைக்கழிவு புத்தாண்டுவரை மட்டுமே
பெற்றிட விரையுங்கள்
கையிருப்பு உள்ளவரை!
RAINBOW LINKS
1ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி ,யாழ்ப்பாணம்
(C/6744)

அனைவருக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
நாளுக்கு நாள் மாறும் தங்கநகைகளை நவீன டிசைன்களில் அறிமுகம் செய்பவர்கள்

சிற்மாரி நகைமாடம்
49(187) கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(C/6741)

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் இன்பத் தீபாவளி நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்

தனிஸ் ரெக்ஸ் ஸ்தாபனத்தார்
ஆண், பெண், சிறுவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், சுபமுகூர்த்த பட்டுப் புடவைகள், சேட்டிங், சூட்டிங், சுடிதார்கள், சோளிகிற், ஸ்கேட்டன், பிளவுஸ் மற்றும் அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், எவர் சில்வர் பொருட்கள், பாதணிகள் இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் எண்ணம் போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்
TRAVELS THANIS.COM
VAN FOR HIRE
Jaffna to Colombo to Jaffna
All Srilanka
யாழ் கொழும்பு வான் சேவை
குறிப்பு :- உங்கள் வீட்டிற்கு வந்து அழைத்துச் செல்லப்படும்
தனிஸ் ரெக்ஸ்
நவாலி வீதி
ஆனைக்கோட்டை
Hot Line :- 0777-060905
- 021-2222955
- 0777-730839

(C/6742)

# தீபத் திருநாள் சிறப்பிதழ்


அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்

**MANGAI SILKS**

அனைத்து வயதினருக்கும் ஏற்ற ஆடைத்தினுசுகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்திட நாட வேண்டிய இடம் **சுன்னாகத்தில்**



**மங்கை சில்க்ஸ்**

(மங்கையர் மயங்கும் ஜவுளிகளின் எழில் மிகு காட்சியகம்)

இல.08 நவீன சந்தை, சுன்னாகம். [C/6676]



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்

**ABINAYA MULTI ELECTRONICS**



- கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள்
- கணனி சார் சேவைகள்
- மற்றும் சகலவிதமான எலக்றோனிக்ஸ் பொருட்களை பெற்றுக்கொள்ளவும்
- புதிய,பழைய பாடல்களை CD மூலம் பதிவு செய்யவும்
- வீடியோக் கசட்டிலிருந்து CD யில் பதிவு செய்யவும்

மானிப்பாய் நகரில் தன்னிகரற்ற ஸ்தாபனம்

**அபிநயா மல்ரி எலக்றொனிக்ஸ்**

யாழ் வீதி, T.P 071-381126 [C/6675] மானிப்பாய்.



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

**நந்தா புடவையகம் & பான்சி கவுஸ்**



- ஆண், பெண், சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
- சேர்ட், T சேர்ட் வகைகள்
- சல்வார் கமீஸ்
- சுப முகூர்த்தப் பட்டுப் புடவைகள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்
- இன்னும் பலரக புடவை தினுசுகளை

மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



**NANTHA TEXTILE & FANCY HOUSE**

யாழ் வீதி, (இலங்கை வங்கி முன்பாக) [C/6677] மானிப்பாய்.



அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்





- ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பான வகைகள்
- சிற்றுண்டி வகைகள்

அனைத்தையும் சுவைத்து மகிழ நாடுங்கள்

**ராஜா கிறீம் ஹவுஸ்**

36,கஸ்தூரியார் வீதி, [C/6678] யாழ்ப்பாணம்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

அசல் 22 கரட் தங்க நகைகளை எழில்மிகு வடிவில் செய்து பெற்றிட வாருங்கள்.

**நியூ கார்த்திகா நகை மாடம்**



**சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்**



நியூ கார்த்திகா நகை மாடம்,
இல 06, மகாராஜா கட்டடம்,
சுன்னாகம் சந்தி,
சுன்னாகம்.
T.P 0777 290816

சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்,
இல 212, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0777 148047

[C/6679]

# தீபத்திருநாள் சிறப்பிதழ்

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்

விவேகா நகை மாடத்தினர்

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளை அசல் 22 கரட்டில் செய்து தருபவர்கள்

விவேகா நகை மாடம்



131, கஸ்தூரியார் வீதி, [C/6685] யாழ்ப்பாணம்.

யாவருக்கும் எமது தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

லிங்கன் கிறீம் ஹவுஸ்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான-சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கு யாழ். நகரில் சிறந்த இடம்

லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, [C/6686] யாழ்ப்பாணம்.

சமாதானமும் சுபீட்சமும் என்றும் நிலைத்திட அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

✪ புத்தம் புதிய தரம்மிக்க மோட்டார் சைக்கிள்களா?
✪ அவற்றிற்கான உதிரிப்பாகங்களா?
✪ பற்றறி வகைகளா? ✪ அஸிட் வகைகளா?

இவையனைத்தையும் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள



அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர் றேடர்ஸ்

106, ஸ்ரான்லி வீதி, [C/6684] யாழ்ப்பாணம்.

எமது அன்பான வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

யாழ் நகரில் புதியதோர் அறிமுகம்

நவீன் செலுலர் போன் சொப்

யாழ்நகர் மக்களின் கையடக்க தொலைபேசிகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும், அதன் உதிரிப்பாகங்களை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்ளவும் யாழ் நகரின மத்தியில் புதியதோர் தூள் பறக்கும் உதயம்.




நவீன் செலூலர் போன் சொப்

உங்கள் புத்தம் புதிய செல்போன்களை பெற்றுக்கொள்ள அதன் வகைகளான நோக்கியா, சம்சூன்ங், மோட்டோறோலா, அல்கெட்டல், சீமென்ஸ், பனசோனிக், பொஸ் ஆகிய உயர்தர போன்களைப் பெற்றுக் கொள்ளவும் உங்கள் சேமிப்பின் சிக்கனத்தை உணர்ந்து உங்கள் தொலைபேசிக் கட்டணத்தை குறைத்து செலுத்தும் வகையான இணைப்பை இலகுவாக பெற்றுத் தருபவர்கள்



நவீன் செலூலர் போன் சொப் ஸ்தாபனத்தார்





உங்கள் இன்றைய செல்போன் தெரிவின் நண்பன்

நவீன் செலூலர் போன் சொப்

185/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகாமை)
தொலைபேசி: 0777 -574160

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

வந்து விட்டது "திவான்" வியாபாரக் குறியீடு கொண்ட கணக்குக் குற்றிகள். இன்றே விஜயம் செய்யுங்கள். பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருள்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வு கூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P. புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது' அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

குறிப்பு: எம்மிடம் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5542

[C/6669]



# தீபத்திருநாள் சிறப்பிதழ்





## இலங்கை வங்கியின் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்




எமது வாடிக்கையாளர் யாவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

மரத் தளபாடங்கள், யன்னல் நிலைகள்,
கதவுகள், சப்பும் பலகைகள்,
தீராந்திகள், கல், மண் என்பனவற்றை
தரமான முறையில் பெற்றுக்கொள்ள

## ஈஸ்வரி மரக்காலை அன் தொழிலகம்



பலாலி வீதி, [C/6715] பரமேஸ்வராச் சந்தி.

---

## சௌமியாவின்

இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
அனைத்து ரக ஆடைத் தினுசுகளுக்கும்
நீங்கள் நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்



## சௌமியா ரெக்ஸ்

இல. 04, பஜார் வீதி, [C/6702] யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
யாவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

☐ T.V. வகைகள் ☐ டெக் வகைகள ☐ அன்ரனா வகைகள் மற்றும்

உலகத் தரம் வாய்ந்த LG. தயாரிப்புக்களைப்
பெற்றுக்கொள்ள

## வீ. கே. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C/6701] T.P. 021 222 2056

---

தித்திக்கும் இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்

## உதயன் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்

இல. 59, பிரதான வீதி, சங்கானை.

---

எல்லோருக்கும் இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்

## ஒக்ஸ்போட் ட்ரேடேர்ஸ்

ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை

---

யாவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

## ஸ்ரீ நாகபூசனி ஸ்ரோர்ஸ்

சீரணி, சண்டிலிப்பாய்.

---

அனைவருக்கும் எம் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்

## கிருஷ்ணா பாம்

பொன்னாலை வீதி, மானிப்பாய்.

---

எல்லோருக்கும் எம் தீபாவளி
வாழ்த்துகள்

## குணம் வேக்ஸ்

பிரதான வீதி, சங்கானை.

---

எல்லோருக்கும் எம் இதயம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## இந்திரன் பாதணியகம் அன் தொலைத் தொடர்பகம்

பிரான்பற்று வீதி, சங்கானை. T.P. 0602 212669

---

எல்லோருக்கும் எம் தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

## THAMBIAYAH & CO

62/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

அனைத்து உள்ளங்களுக்கும் எம் இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
நவீன வடிவமைப்பிலான தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள



## பிறேம் நகை மாடம்



[C/6703] யாழ் வீதி, சந்தையடி, மானிப்பாய்

# தீபத்திருநாள் சிறப்பிதழ்


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்



## GEETHA JEWELL HOUSE

மென்மைக்கு மெருகூட்டும் இளமைக்கு எழிலூட்டும் அசல் 22 கரட் தங்க நகைகளை எழில்மிகு வடிவத்தில் செய்து பெற்றிட வாரீர்.



## கீதா ஆபரண மாளிகை

[C/6713]

இல. 12,– நவீனசந்தை, கண்டி வீதி, சாவகச்சேரி. உரிமையாளர்:– கந்தசாமி ஜீவகாந்தன்

Note: வாடிக்கையாளர் நன்மை கருதி எமது ஸ்தாபனம் மீண்டும் சாவகச்சேரியில் (பழைய இடத்தில்) இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகின்றோம்.

அனைவருக்கும் எம் இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற
மகிழ்ச்சி அடைகின்றோம்

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளுக்கு



## உதயகதிரவன் நகை மாடம்

172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்

213, கஸ்தூரியார் வீதி, [C/6712] யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எம் தீபாவளி
நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற
மகிழ்ச்சி அடைகின்றோம்

## ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

பக்ஸ், போட்டோப் பிரதிகள், லமனேற்றிங்,
கொம்பியூட்டர் ரைப்பிங்
E-mail & internet, sales & service
இன்னும் பல சேவைகளுக்கு



ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். [C/6711]

T.P: 021 222 2670, 3588
Fax: 021 222 3214

தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
யாவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றார்கள்

## சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்

மின்சார உபகரணங்கள், Amton PVC குழாய்கள், இணைப்புகள், பீலி வகைகள், PVC கதவுகள், நீர்த்தாங்கிகள், இணைப்புகள், ABANS ஸ்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களான LG குளிர்சாதன பெட்டிகள், சலவை இயந்திரங்கள், DEEP FRECZER, LG. T.V, வீடியோ டெக் முதலியன மற்றும்

மின்சாரத்தை குறைந்த அளவில் செலவிடும் மின்குமிழ்கள், புதிய அதிநவீன தயாரிப்புக்களில் அமைந்த தொங்கவிடும் மின்விளக்குகள், அதற்கான சுவர் விளக்குகள், அதி நவீன மின் இணைப்பு உபகரணங்கள், மின் விசிறிகளில் பல்வகைகள், ஒருங்கே விருப்பத்துக்கேற்ப தெரிவுசெய்து கொள்ள நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்!

நேர்மை, நியாயம், உத்தரவாதத்திற்கு என்றென்றும்!!



## சுந்தர்சன்



மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்

T.Phone/Fax : 021 222 2751

முக்கிய குறிப்பு:
குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாக பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களின் இடத்திற்கு அப்பொருட்கள் எமது வாகனம் மூலம் சேர்க்கப்படும். அத்துடன் தொலைபேசி மூலமாகவும் தேவைப்படும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

[C/6710]

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் —குறள்

வலம்புரி

## ஏழைகள் வாழ்வில் ஒளிபிறக்கட்டும்

உலகில் உள்ள இந்துக்கள் கொண்டாடும் தீபாவளித் திருநாள் இன்று. அதர்மம் அழிந்து தர்மம் பிரகாசித்த நாளாகக் தீபாவளியை இந்துக்கள் கொண்டாடுகின்றனர். நரகாசுரன் என்ற அசுரத்தனம் தெய்வீக சக்தியால் அழிந்து தேவ குலமும், மனித குலமும் மகிழ்வுற்ற தினத்தில் மக்கள் தீபங்களை ஏற்றி கொண்டாடுகின்ற இந் நன்நாள் வெறும் கொண்டாட்ட திரு நாள் மட்டுமல்ல; மக்கள் யாபேரும் மகிழ்வாக இருக்க வேண்டிய சூழலை ஏற்படுத்துகின்ற திருநாளாகும்.

இல்லாதவர்க்கும், ஏழைகளுக்கும் இத் திருநாளில் உண்டியும், புத்தாடையும் வழங்கி அவர்களை மகிழ்விக்கின்ற தர்மக் காணிக்கையை செய்வதன் மூலம் ஏழைகளின் வாழ்வில் மகிழ்வை ஏற்படுத்த வேண்டும்.

ஏழ்மை என்ற சொல்லை இல்லாமல் செய்வதே தீபாவளித் திருநாள் கொண்டாட்டத்தின் தத்துவம். பிறர் மீது அன்பு செலுத்துவதன் மூலமே தன்னுயிர் போல் மன்னுயிரை மதிக்கும் உயரிய மாண்பு உதயமாகும்.

ஆணவம் என்ற செருக்கை மனதில் கொண்டோர் மனிதத் தன்மையை இழந்து விடுவர். மனிதம் இழக்கப்படுமாயின் உலகம் முழுவதிலும் சண்டையும், சச்சரவும், உயிரழிவுகளுமே இடம்பெறும். இதனை உணர்த்தவே புராண இதிகாசங்கள் தோற்றம் பெற்றன.

தான் மட்டும் உண்டு-உடுத்து உறங்குவது மனித வாழ்வாகாது, அயலவனின் கஷ்ட துன்பங்களை கண்டும் காணாது இருப்பது மனித குலத்தையே அழிக்கவல்லது. பக்கத்திலிருப்பவன் துன்பந்தனை பார்க்கப் பெறாதவன் புண்ணியமூர்த்தி என்றான் பாரதி. பாரதியின் சிந்தனை தந்த பாடல் இந்த உலகில் வாழ்கின்ற மனிதர்களுக்கு ஓர் கடமையை உணர்த்தி நிற்கிறது.


ஆம் ஏழைகளுக்கு இல்லையென்னாது ஈந்தளித்து இன்புறுதலையே தீபாவளி போன்ற திருநாள்கள் உணர்த்தி நிற்பதால் நாமும் எங்களால் இயன்றதை ஏழைகளுக்கு வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்றி மகிழ வேண்டும்.

யுத்தம் தந்த அனர்த்தங்களினால் சொந்த மண்ணை, மனையை இழந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் குடிசைக்குள் குந்திக் கொண்டு எமக்கு விடிவு கிடைக்குமா என ஏங்கித் தவிக்கின்றனர்.

கதிரவனின் வரவும், மறைவும் காலத்தை அசைக்கின்றனவே தவிர ஏழைகளின் வாழ்வில் இன்னமும் ஒளிக் கீற்று தெரியவில்லை. அதனை ஏற்படுத்த வேண்டுமாயின் வசதி படைத்தவர்கள் பொருள் ஈந்து ஏழைகளுக்கு உவந்தளிக்க் வேண்டும். அதனைச் செய்வதற்கான திருநாளே இத் தீபாவளி என்பதை உணர்ந்து அனைவரும் செயற்படுவோமாக.

# தீவினை அகற்றி தர்ம வழி செல்ல மானிடர்க்கு வழிகாட்டும் மகத்தான நாள்

இறைவனை வழிபடவும் இறை கருணையைப் பெறுவதற்கும் உதவுபவை விரதங்களும் பண்டிகைகளும் ஆகும். விரதங்களின் போதும் பண்டிகைகளின் போதும் நீராடி தோய்த்துப் புதிய ஆடை அணிந்து புறத்தூய்மை உடையவராகவும் தெய்வநினைவின் பயனாக அகத் தூய்மை நிறைந்தவராகவும் ஆலயம் சென்று வழிபடுகின்றோம்.



விரதங்கள் பண்டிகைகள் போன்றன புராண இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே காணப் படுகின்றன. அவை தெய்வத்தின் கருணையினையும் அசுரர்களின் கொடுமைகளையும் விளக்கி இறுதியில் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி வகுக்கின்றன.

அதர்மத்தை நீக்கி தர்மத்தை நிலைநாட்டிய நாளை நினைவூட்டுவதே தீபாவளித் திருநாள். இங்கு அதர்மம் இருளாகவும் தர்மம் ஒளியாகவும் கூறப்படுகின்றது. தீபாவளி கூறும் புராணக்கதையில் வரும் நரகாசுரன் கொடியவன் ஆனாலும் திருமாலால் வதம் செய்யப்பட்டபோது நல்லறிவு பெறுகின்றான். அந்த நல்லறிவு விஷ்ணுவின் திருக்கோலத்தைக் கண்டதால் ஏற்பட்டது. நல்லறிவின் காரணமாக காத்தற் கடவுளாகிய விஷ்ணுவிடம் தீபாவளியை எப்படிக் கொண்டாட வேண்டும் என நரகாசுரன் கேட்டான்.

நரகாசுரன் எனும் அசுரன் சாகு முன்பு நல்லறிவு பெற்று கடவுளே நான் எனக்காக ஒரு நன்மையும் கேட்கவில்லை. இது வரை எனது ஆணையால் கோயிலுககுச் செல்லாது பாவ வழியில் சென்றவர்கள் இனிக் குளித்துப் புதியஆடை அணிந்து கோயிலுக்குச் செல் லவும், புண்ணிய கருமங்களில் ஈடுபடவும, புண்ணிய நினைவு களால் அகத் தூய்மை யைப் பேணிக கட வுளை வழிபட வேண் டும் என்றான்.

### தீபாவளியின் சிறப்பு

இந்துக்களின் மிகமுககியமான பண்டிகையாக இருப்பது தீபாவளி. இந்தியா, இலங்கை மட்டுமன்றி தமிழர் வாழும் இடங்கள் எங்கும் ஏழை, பணக்காரன் என்ற வேறு பாடின்றி இத் த்ீபாவளி கொண்டாடப் படுகினறது. இடம், சூழல், பண்பாட்டு முறை, வாழ்வியல் முறைக்கு ஏற்ப தீபாவளி கொண்டாடும் முறை வேறுபடும். தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள் படும். இப் பண்டிகையானது ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் கொண் டாடப்படுகின்றது. நரகாசுரன் எனும அசுரனைக் கண்ணன் வதை செய் ததையொட்டி அவரின தாயாகிய பூமாதேவியின் வேண்டுகோளுக் கிணங்க கொண்டாடும் தினமே தீபாவளி என்பது அஸ்ஸாம் மாநிலத தில் வழங்கும் கதைகளின் சாரம் ஆகும். தேவர்களும் மனிதர்களும் கொடிய அரக்கனான நரகாசுரனால் பெரும் துன்பத்திற் குள்ளாயினர். தேவர்களின் தலை வனான இந்திரன் பகவான் கிருஷ் ணனிடம் முறையிடவே கிருஷ்ணர் நரகாசுரனுடன் போர் புரியப் புறப்பட்டார். இந்தப் போரில் சத்திய பாமா சக்தியின் அவதாரமாகச் செயற்பட்டாள். கண்ணன் சத்திய பாமாவினால் நரகாசுரன் எனும் தீய சக்தி அழிக்கப்பட்டதனால் மக்கள் அசுரனின் கொடுமையில் இருந்து விடுபட்ட நாளையே தீபாவளியாகக் கொண்டாடி வருகின்றனர்.

துலாமாத மகாத்மியம் என்ற நூல் தீபாவளி தினத்தில் அதி காலையில் எழுந்து எண்ணெய் தேய்தது் குளித்தால் கங்கா ஸ்நானம் கிடைக்கும் என்பதை ''தைலே லட் சுமி ஜலகங்கா'' என விதந்து கூறுகின்றது. இந்நாளில் எண்ணெயில் லக்ஷ்மியும் தண்ணீரில் கங்கையும் பிரசன்னமாகின்றனர் என்பது ஐதீகம்.

தென்பாரதத்தில் நரக சதுர்த்தசி தீபாவளி எனக் கொண்டாடப்படுகின்றது. வடபாரதத்தில் தீபாவளி ஐந்துநாள் பண்டிகையாகக் கொண் டாடப்படும்.அவை 1. பழைய பொருட் களை நீககிப் புதுப்பொருளை வாங்குதல், 2. வீட்டில் மாவிளக் கேற்றுதல், 3.சாணத்தால் செய்த மனித உருவத்தின் தலையில் விளக் கேற்றுதல், 4. கோவர்த்தன கிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப்பாடுதல், 5.மணமான பெண்களைப் பூசை செய்த பின் தங்கள் சகோதரர்களுக்குத் திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல். இவ்வாறு தென்பாரதம், வடபாரதத்திலும் வழிபடும் முறைகள் வேறுபட்டுள்ளது. தீபாவளி அன்னை பவானியின் பூசையாக வங்காளத்திலும், தாம்பூலத்திருநாளாக மகா ராஷ்டிர மாநிலத்திலும், குபேர பூசையாக குஜராத்திலும் கொண்டாடப்படுகின்றது.

### தீவினை களைவோம்

தீபாவளியின் தத்துவம் அறியாத பலர் அன்றுதான் அளவுக்கு அதிகமாக மது அருந்தி உயிர்க் கொலைகள் புரிந்து இறைச்சி உண்டு பாவத்தைப் பெருக்குகின்றனர். நரகாசுரனின் ஆட்சியில் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியே இன்றும் இருக்கின்றனர்.

''கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள் மேல் சொல்லாது உயிருண்ணுங் கூற்று'' வள்ளுவரின் இக்குறள் மூலம் உயிர்களைக் கொண்டு செல்லும் ஜமன் கொல்லாமையாகிய விரதத்தைக் கடைப்பிடித்து நடப்பவனது உயிரைக் கவரமாட்டான். கொலை செய்தல் வேறு பாவச் செயல்களையும் தரும். இந்த வகையில் உயிரைக் கொல்லாதவனாகவும் ஊனை உண்ணாதவனாகவும் வாழ்பவனை எல்லா உயிர்களும் வணங்கும். எனவே ஒவ்வொரு இந்துக்களும் மேற்கூறிய செயற் பாட்டில் இருந்து விடுபடும் போதே மனதில் அமைதியும் சாந்தமும் ஏற்படும். ''எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் அதிகரிக் கின்றதோ அப்பொழுது நான் அவ தரிக்கின்றேன்'' எனக் கண்ணன கீதையில் கூறியதும் இதையே.

### பண்டிகைகளும் மனித வாழ்வும்

சமயத்திற்கும் பண்டிகைகளுக் கும் மனித வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பண்டிகைகளும் விரதங்களும் போதிக்கும் கருத்தின் படியே மனித வாழ்வு அமைய வேணடும். நல்வாழ்வு என்பது இறைவனோடும் சமூகத்தோடும் தொடர் புடையதாக இருக்கவேண்டும். இதற்கு ஒவ்வொரு மனிதனும் வீடு பேற்றை அடைவதற்குத் தடையாக இருப்பவற்றை நீக்கப் பழக வேண் டும். தர்மம் ஓங்குவதற்கு உதவலாம். தர்மங்கள் பல செய்யவும், தர்மம் பிறழாமல் வாழவும் பழகிக் கொள்வது இறைவனுக்கு அருகில் செல்வதற்குச் சமம். இந்த வகையிலேயே சமயப் பெரியார்கள் பலரும் பாடியுள்ளதை நாம் பார்க்கின்றோம்.

மனிதனாகப் பிறந்த அனைவரும் தெய்வ நம்பிக்கை உடையவராக இருக்க வேண்டும். தெய்வ நம்பிக்கை தான் நீதியில் நம்பிக்கை கொள்ளச் செய்யும். நீதியைப் பின்பற்றித் தெய்வ நம்பிக்கையோடு வாழ்பவன் தான் பிறவிப் பயனை அடைய முடியும். தெய்வத்தின் கருணையையும் பெறமுடியும். உயிர்களிடம் அன்பு செலுத்துவதன் மூலம் இறைவனின் அருளைப் பெறமுடியும்.

எனவே தீபாவளித் திருநாளில் மனதில் நல்லெண்ணம் வளரவும், ஏழை பசித்தோர்க்கு முகம் பார்த்து உணவளிக்கவும், புண்ணியத்தைப் பெருக்கவும், தான தர்மங்கள் செய்து இந்தப் பண்டிகை நாளிலிருந்து உறுதிகொண்டு நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் பெற்று இன்புற்று வாழ்வோம். □

ஆ.சிவகுமார்
சித்தாந்த பாலபண்டிதர்
சைவப்புலவர்

# தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் தாமதம் ஆபத்தான நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும்

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரி எச்சரிக்கை

(கொழும்பு)

கடற்படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்குமிடையில் தகவல் பரிமாற்றத்தில் முட்டுக்கட்டை நிலை ஏற்படுவது ஆரோக்கியமற்ற ஆபத்தான சூழ்நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லலாம் என சிரேஷ்ட பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

கடற்படையினருக்கும் கண் காணிப்புக் குழுவினருக்குமிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக் கைகள் சிறிது முன்னேற்றம் கண்டிருக்கும் இவ் வேளையில், இவ் அதிகாரியின் எச்சரிக்கை வெளிவந்திருப்பது, இது குறித்த இறுதியான முடிவை அரசியல் மட்டத்தில் எடுக்கப்பட வேண்டியிருப்பதன் அவசியத்தை வலியுறுத் துவதாக அமைந்துள்ளது.

கடந்த 16ம் திகதி அன்று முல்லைத்தீவுக்கு அருகில் இடம் பெற்ற சம்பவம் போன்றே தொடர் பாடல் அற்றுப் போவதனால் ஆபத் தான நிலைமை இனிமேலும் ஏற்படக் கூடும்.

மேலும் கடற்படை உயர் அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மரப்பனவையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவையும் நம்ப வில்லை என்பதையும் இதன் மூலம் தெரிகிறது.

கடற்படையினரிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல்கள் அனுப்புவதில் கால இடை வெளிகள் விடப்படுகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட் டுள்ளார்.

கடந்த 16ம் திகதி புலிகளின் ஆயுதம் தாங்கிய கப்பல் முல்லைத் தீவுக் கரையோரமாக தென்பட்டது என்ற தகவல் அன்றைய தினம் மு.ப.2.30 அளவிலேயே கடற் படைத் தளபதி தயா சந்தகிரிக்கு கிடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத் தளபதியின் கட்டளைக்கு அமைய இக் கப்ப லைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன ஆனால் புலிகளுக்கு கண்காணிப்புக் குழுவினர் வழங்கிய தகவல் காரணமாக இக் கப்பலைக் கைப்பற்ற முடியாது போய்விட்டது என சனியன்று ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னரே ஜனாதிபதி இக் கப்பல் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டார். இத் தகவல் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட வில்லை. இந் நடவடிக்கை பற்றி கடற்படைத் தளபதியினால் தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

உண்மையில் கண்காணிப்புக் குழுத்தலைவர் இவ் விடயம் குறித்து தொடர்பு கொண்ட போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இதுபற்றி முதன் முதலில் அறிந்திருந்தார். அதே வேளை இச் செய்தி உறுதி செய்யப்படாததாலேயே பாதுகாப்பு அமைச்சுக்கு தாம் இது குறித்து அறிவிக்கவில்லை என சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரிக்வே ரெலிவிசனுக்கும் கடற்படைத் தளபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ மற்றும் சமாதானச் செயலகப் பிரதிநிதி டிரோன் குணவர்த்தனாவுக்குமிடையில் செவ்வாயன்று சந்திப்பொன்று இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது. (உ-6)

## தினசரி தியானம்

### உண்மை

உண்மையை எண்ணி பேசிச் செயலாற்றுவதன் மூலம் இந்நிலவுலகை ஒரு தெய்வலோகமாக மாற்றமுடியும். ஆனால உண்மையின் சரியான இயல்பைக் கண்டு பிடிப்பது மிகப் பெரிய வேலையாகும். உண்மை மறைந்திருக்கிறது. ஒரு சமயம் ஒருவரால் உண்மை என்று ஏற்கப்படுவது இன்னொருவருக்கு உண்மையாகப்படுவதில்லை. ஆகவே பகுத்தறியும் பழக்கத்தோடு வாழுங்கள். பொய்மையை ஒதுக்கி விட்டு உண்மையை ஏற்க முயற்சி செய்யுங்கள். சரியான நேரத்தில் தெளிவு தானாகவே வந்து சேரும்.

சுவாமி சிவானந்தர்

# பிரதமரின் இந்திய விஜயம் குறித்து விசேட விவாதம் நடத்த வேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார, பொருளாதார, தேசிய பாதுகாப்புக் கொள்கைகளில இந்தியாவுடனான உறவை மைல் கல்லாகவே அரசாங்கம் கருதிவருகிறது என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில விக்கிரமசிங்காவின் இநதிய விஜயம் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பதிலாக சமர்ப்பிக்கவுள்ள யோசனைகள் முழுமையானதாகவும் நயாயமானதாகவும் இருக்குமென இந்தியா எதிர் பார்க்கின்றது.

இலங்கையின் பாதுகாப்பு குறித்த நலன்களைத் தொடர்ந்தும் பேணுவதிலும் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பவற்றைக் கட்டிக்காப்பதற்கு இந்தியா இணங்கியுள்ளது என்றார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவின் பிரதமரின் இந்திய விஜயம் பறறிய விளக்கவுரையைத் தொடர்ந்து இந்தியாவுடனான கூட்டறிக்கை தொடர்பான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கேட்டுக் கொண்டார். அதற்கு இலங்கை இந்திய அரசுகளால் வெளியிடபபட்ட கூட்டறிக்கையாக இருப்பதால் அது பற்றிய விளக்கங்கள் தங்களுக்குத் தேவைப்படாது என்று அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள பிரதமரின் இந்திய விஜயம் குறித்த அறிக்கை தொடர்பாக வசேட விவாதம் ஒன்றை நடத்த வேண்டுமென விமல்வீரவன்ச கேட்டுக் கொண்டாா.

அதற்கு அரசாங்கத்தின சார்பில் பதிலளித்த பிரதான கொறடாவான தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க எந்த நேரத்திலும் விவாதத்தினை நடத்த தயாராக அரசு இருப்பதாக கூறினார். (உ-60,10)

## இனிய இதயங்களின் தீபாவளி விழா

(யாழ்ப்பாணம்)

இனிய இதயங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முதியோர் இல்லத்துடனான இனிய இதயங்களின் தீபாவளி விழா இன்று பி.ப 2.00 மணிக்கு மேற்படி அமைப்பின் தலைவரும் இலங்கை வங்கி யாழ். பிரதான கிளையின் பிரதான முகாமையாளருமான சி.விக்கினராசா தலைமையில் கைதடி அரச முதியோர் இல்ல மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் எஸ்.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியரும் வாழ்வகத்தின் உப தலைவருமான ஆரவீந்திரனும கலந்து கொள்ளவுளளனர். (உ-18)

## திறப்பு விழா

(கிளிநொச்சி)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவுடனும் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதியுதவியுடனும் தமிழ் தகவல் தொழில் நுடப நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலுடனும் கிளிநொச்சி இராமநாதபுரம மகாவித்தியாலயத்தில் அமைக்கப் பட்டுள்ள கணனி நிலையத் திறப்பு விழா இன்று மு.ப 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-43)

## சுப்புரமுனிய சுவாமிகள் குருபூசை இன்று

(இருபாலை)

ஸ்ரீ சுப்புரமுனிய கோட்டம் சைவச் சிறுவர் முன்னேற்றக் கழகம் நடாத்தும் யோகர் சுவாமிகளிடம் அருளாசி பெற்ற சிவாய சுப்புரமுனிய சுவாமிகளின் 2வது குருமகாசமாதி குருபூசை இன்று பி.ப 3.30 மணிக்கு சுப்புரமுனிய கோட்ட மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. (உ-84)

### புலிகள்....

இயங்கவில்லை. வர்த்தக நடவடிக்கைகள முற்றாக ஸ்தம்பித்திருந்தன. போக்குவரத்து சேவைகளும் தடைப்பட்டன. இதனால் கிண்ணியாப் பிரதேசத்தின் இயல்புநிலை முற்றாகப் பாதிப்படைந்தது.

ஹர்த்தால் அனுஷ்டிக்கபட்ட நேரத்தில் ஆலங்கேணியில் இருந்து கிண்ணியா ஊடாக செல்ல வந்த விடுதலைப் புலிகளின் ஆட்டோ முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் தடுக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் தடியடிப் பிரயோகமும் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்தினர் மீதும் பொலிஸார் மீதும் கற்களை வீசித் தாக்கினர்.

கலவரம் கட்டு மீறிச் செல்வதை உணர்ந்த படைத் தரப்பினர் ஆட்டோவில் வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவரையும் பாதுகாப்பாகக் கூட்டிச் சென்றனர்.

இக் களேபரத்தின் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் மஹ்றூப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோரது வீடுகள் கற்களால் வீசித் தாக்கப்பட்டதுடன், வீடுகளுக்குள் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வீட்டு உடைமைகளுக்குத் தீவைத்தனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக்கின் அலுவலகத்திற்குள் நுழைந்த முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்கள் அலுவலக உடைமைகளுக்கும் தீவைத்தனர். இதேவேளை தனியார் செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவரது வீடும் மேற்படி கும்பலினால் தாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் திருகோணமலையில் கால வரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது. (த)

### கண்காணிப்புக்குழுத்....

விவகாரம் சூடுபிடிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சனை பதவியில் இருந்து அகற்றிவிடுமாறு நோர்வேப் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் நடுநிலையுடனும், மனச்சாட்சியுடனும் செயற்பட வேண்டிய கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சனின் நடவடிக்கைகளில் சந்தேகங்களைத் தோற்றுவிக்கக் கூடிய தன்மைகள் தெரிகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்த கப்பலில் இருந தவர்களுக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கொடுத்த தகவலால் அக் கப்பல் தப்பிச் சென்றுள்ளது. கண்காணிப்புக் குழுவினரின் இச் செயலானது இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ரெலிவ்சனின் நடவடிக்கைகள் இலங்கையின் பாதுகாப்புக்கு திருப்தியில்லாது இருப்பதால் அவரை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

### போரைப் புலிகள்....

தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

இந்திய உளவு நிறுவனங்களின் தகவலகளின் படி தமிழீழ விடுதலை புலிகள் மீண்டுமோர் போருக்குத் தயாராக மாட்டார்கள் என்பது புலனாகியிருப்பதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் என்னைச் சந்தித்துப் பேசிய போது சுட்டிக் காட்டியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயல்களைக் கைவிட்டு விட்டு சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் ஈடுபட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாக சபை அமைப்பு வடக்குக் கிழக்கு மாகாணத்திற்குப் பொருத்தமானதென்றும் அத்தகைய இடைக்கால நிர்வாக அமைப்பை அரசு வழங்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்க விடயமெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வை இந்தியா முழுமையாக ஆதரிக்குமெனவும். இந்தியப் பிரதமர் உறுதியளித்துள்ளார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.(உ-60,10)

# முனைப்பகுதிச் சம்பவம்

# படையினர்-பொதுமக்கள் சந்திப்பு முடிவு ஏதுமின்றி முற்றுப் பெற்றது

(திருநெலவேலி)

பருத்தித்துறை முனைப்பகுதியில் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தணிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற பல்தரப்புச் சந்திப்பு முடிவேதும் எட்டப்படாத நிலையில் நிறைவு பெற்றது.

முனைப்பகுதி கடற்றொழிலாளர் சங்க ஏற்பாட்டில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சமரசக் கூட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலப் பிரதிநிதிகள், பருத்தித்துறைப பொலஸ் நிலையப பொறுப்பதிகாரி ஹப்புஆராய்ச்சி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ். அலுவலக இணைப்பாளர், மத குருமார், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் 524வது படையணியின் பிரதிக்கட்டளை அதிகாரி, முனைப் பகுதி இராணுவத் தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் படையினரால் பொதுமக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் இனி மேல் இடமபெறாது என்ற உறுதி மொழியை படைத்தரப்பினர் தரவேண்டும் எனவும், நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் படையினரால் சேதமாக்கப்பட்ட படகுகளுக்கான நட்டஈட்டை உடனடியாக வழங்க வேண்டும் எனவும் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவற்றுக்கு இணங்கிப் போக படைத்தரப்பு மறுத்து விட்டது.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட விடயம் பொதுமக்களும் படைத்தரப்பினரும் சம்பந்தப்பட்டது என்பதால் அவர்களே அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று அங்கு பிரசன்னமாகியிருந்த கண்காணிப்புக் குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ-43)

# நேரடிப் பேச்சுக்குத் தயார்படுத்துமாறு நோர்வேயிடம் அரசு வேண்டுகோள்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிாவாகக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் யோசனைகள் கிடைத்ததும் நேரடிப் பேச்சுவாார்ததைகளை ஆரம்பிக்கக் கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் நோர்வேத் தரப்பிடம் அவசர வேண்டுகோள் விடுத்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ் இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனைகள் எதிர்வரும் 31ஆம் திகதி நோர்வேத் தரப்பினரின் ஊடாக அரசிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

அவர்களின் யோசனைகள் அரசுக்கு கிடைத்தவுடன் அவர்களுடன் அரசு நேரடிப் பேச்சுவார்த்தையினை நடத்தத் தீர்மானித்திருக்கின்றது.

இது குறித்து நோர்வேத் தரப்பினருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி நோர்வே சமாதானக்குழு அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, அரசுக்கும் புலிகளுககுமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பு முனையாகக் கருதப்படுவதுடன் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் என்பதைக் காட்டுவதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் மேற்கொள்ளப் பட்டுவரும சமாதான முயற்சிகள் இந்தியாவிற்கு பாதகமாக அமையும் விதத்தில் முன்னெடுத்துச் செல்லப் பட்டு வருவதாக கூறிவரும் எதிர்க் கட்சியினரின் கருததுக்களையும் சதித்திட்டங்களையும் இந்தியா புறக் கணித்திருக்கிறது.

அத்துடன், இந்தியா இது குறித்து கடும் அதிருப்தியும் வெளியிட்டிருக்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் சிறப்பான கொள்கைகள் காரணமாகவே இந்தியா சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்திருக்கின்றது என்றும் பீரிஸ் தெரிவித்தார். (உ-60,10)

### தீபாவளித்....

சமாதானச் சூழ்நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கு இன, மத, மொழிகளுக்கு அப்பால் மனித நேயத்தின் அடிப்படையில் அனை வரும் பாடுபட வேண்டும்.

நாட்டில் தற்போது எந்தக் கட்சி அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதற்கு அப்பால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை கருணையோடு பராமரிக்கின்ற மனித நேயமே அவசியதேவையாக உள்ளது.

எனவே எல்லோரையும் தன்னவர் போல போற்றுகின்ற சைவத் தமிழர்கள் இத் தீபாவளித் திருநாளில் ஏழைகளுக்கு உதவ முன்வருவதோடு, நிரந்தர சமாதானம் ஏற்படவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக இவ்வாறு அவர்களின் ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### தேசிய தீபாவளித்...

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசி உரையையும், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் வரவேற்புரையையும். யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் சிறப்புரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

தீபாவளி சிறப்புச் சொற்பொழிவை தமிழ் நாடு பேரூர் ஆதீன இளவரசு தவத்திரு மருதாசலம் அடிகள் ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் உலகப் புகழ் பெற்ற தென்னிந்திய வயலின் இசை மேதை டாக்டர் குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (உ)

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

புடைவை வகைகள், இரும்புப் பொருட்கள், பலசரக்குப் பொருட்கள், புத்தகங்கள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்வதுடன்பிளாஸ்டிக் கதிரைகள், இரும்புக் கதிரைகள், தகரப் பந்தல் என்பவற்றை குறைந்த வாடகைக்கு பெற்றிட நாடுங்கள்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

கட்டைவேலி நெல்லியடி

T.P :- 226-3263

(சி-6745)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.